ஈஸ்ரர் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 Fax: 021 - 222 9041, ISSN 1391-7633

மலர் : 142 | இதழ் : 05 | திகதி : 01.04.2018 | விலை : 40.00

## அல்லேலூயா வாழ்த்துக்கள்



## இளையோர் ஆண்டில் உயிர்ப்போம் இயேசுவுடன்



நம் வாழ்வுப் பயணத்தில் பொறுமைகாக்கவும், பாலை நில அனுபவங்களைக் கடக்கவும், மீட்பின் அனுபவத்தையடையவும் திறவுகோலாய் அமைந்திருப்பது திருச்சிலுவையே !



எமது வாழ்க்கையில் வருகின்ற துன்ப துயரங்களைக் கண்டு மனம் சோர்ந்து போகாது உயிர்த்த இயேசுவின் உடனிருப்பு எப்போதுமே இருக்கின்றது என்ற நம்பிக்கையுடன் வாழ்வோம். ☞ 03

## புதிதாய்ப் பூக்கும் குருக்கள் ஐவர்

புதிய குருக்களாக ஐவர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் யாழ் மரியன்னை பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

அருட்பணியாளர்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ள மறைமாவட்டத் திருத்தொண்டர்களான சிந்தாத்துரைதாஸ் அஜந்தன், ஞானசீலன் ஞானரூபன், அந்தோனிமுத்து அல்வின் கிருபாகரன், அருச்சுனன் அருள் போல் அனக்கிளிற்,செபமாலைதாசர் சபையைச் சேர்ந்த ஜோண்சன் ராஜசேகர் ஆகியோரை "பாதுகாவலன்" வாசக நெஞ்சங்கள் சார்பாக வரவேற்று அறிமுகப்படுத்துவதோடு இவர்களின் பணிக் குருத்துவ வாழ்வு சிறக்க எமது செபங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர்கள் யாழ் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் ஆரம்ப உருவாக்கம் பெற்று யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்தில் தமது மெய்யியல், இறையியல் கற்கைநெறியை நிறைவு செய்தனர்.



**திருத்தொண்டர் சி.அஜந்தன்** அவர்கள் பெரியவிளான் பங்கின் புனித அந்தோனியார் ஆலயத் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு திருமதி சிந்தாத்துரைதாஸ் ஜெயமணி (வதனா) தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்பக் கல்வியை முல்லைத்தீவு கன்னியர்மடம் மகா வித்தியாலயம், மு/கொக்கிளாய் அ.த.க.பாடசாலையிலும் இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியை யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, யா/புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் ஞா.ஞானரூபன்** அவர்கள் மணற்காட்டுப் பங்கின் பொற்பதி குடத்தனை புனித இராயப்பர் ஆலயத் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு திருமதி ஞானசீலன் றோஸ்மலர் தம்பதியினரின் மகனான இவர், தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை யா/குடத்தனை பொற்பதி றோ.க.த.க. பாடசாலை, யா/தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யா/ புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பொற்பதி குடத்தனை புனித இராயப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் அ.அல்வின் கிருபாகரன்** அவர்கள் பலாலி பங்கின் தூய ஆரோக்கிய மாதா ஆலயத் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு.திருமதி அந்தோனிமுத்து மேரி திரேசா தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை யா/பொற்பதி றோ.க.த.க. பாடசாலை, பருத்தித்துறை கலட்டி றோ.க.த.க. பாடசாலையிலும் உயர்தரக் கல்வியை யா/புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் அ.போல் அனக்கிளிற்** அவர்கள் பண்டத்தரிப்புப் பங்கின் மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு திருமதி அருச்சுனன் அருள் பிலோமினா தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை யா/ அளவெட்டி றோ.க.த.க. பாடசாலை,யா/ மகாஜனாக் கல்லூரி என்பவற்றிலும் உயர் தரக் கல்வியை யா/ புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.இவர் தனது முதற் திருப்பலியை 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் ஜோ.ராஜசேகர்** அவர்கள் செபமாலைமாதா துறவற சபையைச் சேர்ந்தவர். இவர் குருநகர்ப் பங்கின் புனித யாகப்பர் ஆலயத் திருச்சபையைச் சேர்ந்த திரு திருமதி ஜோண்சன் அல்வீனம்மா தம்பதிகளின் மகனாவார். இவர் தனது ஆரம்பக்கல்வியை புனித ஜேம்ஸ் வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யா/புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை நிறைவு செய்த இவர் வவுனியா செபமாலை அன்னை ஆச்சிரமத்தில் நவதுறவற வாழ்வை மேற்கொண்டார்.இவர் தனது முதலாவது திருப்பலியை 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

# எமது எண்ணம்

## இளையோர் ஆண்டில் உயிர்ப்போம் இயேசுவுடன்

மதங்கள் ஒற்றுமையின் அடையாளம். நல்லிணக்கத்தின் சின்னம். மனிதனை மனிதத்துவத்துடன் வாழ வகை செய்யும் வழிகாட்டி. இனம், மொழி, பால் வேறுபாடுகளைக் கடந்து அவற்றை இணைத்து மனித மாண்பை நிலைநிறுத்தும் பாலம்.

மதங்கள் மக்கள் நல்வாழ்வுக்கான பல்வேறு அறக் கருத்துக்களைக் கூறியுள்ளன. ஒவ்வொரு சமயத்தினுடைய புனித நூல்களும் பல்வேறு அறக்கருத்துக்களை தம்மகத்தே கொண்டுள்ளன. எந்த மதங்களும் மக்கள் மனங்களை வெல்ல வேண்டுமே தவிர நிலங்களையல்ல. மதங்களின் நோக்கம் மக்களின் மனங்களை அன்பால் ஈர்ப்பதே தவிர அதிகாரத்தால் தூர்ப்பது அல்ல. மதம் என்பது மக்கள் அன்புப் பயணம் போவதற்கு அமைந்த பாலங்கள். மக்களுக்காக மதங்கள் தோன்றியதே அன்றி, மதங்களுக்காக மக்கள் தோன்றவில்லை.

இந்தப் பேருண்மையை எல்லா மதங்களும் உணர வேண்டிய காலம் வந்துவிட்டது. உண்மையான கடவுள் பற்றாளர், மதத்தினை நேசிப்பவன் ஆவான். அவன் தன்னால் பார்க்கமுடியாத கடவுளை எல்லா உயிர்களிடத்திலும் பார்க்கின்றான். அவனுடைய கடவுள் பக்தி எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக மலர்கிறது." தன் கண்ணால் காணும் சகோதரனுடன் அன்பு பாராட்டாதவன் கண்ணால் காணாத இறைவனிடம் எவ்வாறு அன்பு கூர்வான்?" என கிறிஸ்து இயேசு வினாத் தொடுத்தமை மனம்கொள்ளத்தக்கது. இவ்வாறு சமூக நல்லுறவையும், விழுமியப் பண்பாட்டையும் மக்களிடையே வளர்த்தெடுப்பதற்கு பிரதானமாக மதங்கள் துணை நிற்கின்றன.

இத்தகு மதங்கள் இன்று இலங்கைத் திருநாட்டில் அரசியல் ரீதியாக, இன மொழி ரீதியாக பிளவினை ஏற்படுத்தும் ஆயுதங்களாக மாறி வருவது மிகுந்த வேதனையைத் தருகின்றது. இத்தவக்காலத்தில் கண்டியில் ஏற்பட்ட இனங்களுக்கு இடையேயான மோதலில் மதங்கள் பின்புலமாக நின்றமை துரதிஷ்டவசமானது. இந்நிலையில் இயேசுவின் உயிர்ப்பு எமக்குத் தரும் செய்தி யாது என்பதை உய்த்துணர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உலக அரங்கில் மதத்துக்கு அரசியலமைப்பில் முதன்மை கொடுத்து காலாதிகாலமாக மதத்தின் பின்னணியில், மதம் என்ற போர்வைக்குள் இலங்கை மண் பல இரத்தக் களரிகளைக் கண்டமை வரலாற்று உண்மையாகும். "என் அரசு இவ்வுலகைச் சார்ந்தது அல்ல" என்று கைதிக் கோலத்தில் நின்ற இயேசு, மன்னன் பிலாத்து முன் பிலாத்துவின் அரசியல் மேடையில் முழங்கியது மதம் என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதையே தெளிவுபடுத்துகின்றது. மதங்களின் பெயரால் நாட்டையும், இனங்களையும், சமூகங்களையும் கூறுபோட்டு நல்லிணக்கத்தையும், நல்லாட்சியையும் சிதைப்போருக்கு இயேசுவின் உயிர்ப்புச் செய்தியாக இது அமையட்டும்.

இயேசுவின் உயிர்ப்பு இளையோர் உலகை உயிர்ப்படையச் செய்ய வேண்டிய மற்றுமொரு பக்கமும் உண்டு. தமிழ் இளையோர் உலகின் உயிர்ப்பில் தான் இன்று நமது தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலத் தலைவிதி தங்கியுள்ளது. "இளைஞர் அறிவும், விவேகமும் அடைவர்" (நீதிமொழி 1:4) என வேதாகமம் கூறுவது போன்று தமிழ் இளையோரின் அறிவும் ஆற்றலும் இன்றைய காலகட்டத்தில் ஆற்றுப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

ஆனால் "கையாளுவதற்குக் கடினமான கொடிய காலம்" என 2 தீமோத்தேயு 3:1-5 கூறுவதற்கிணங்க எமது இளையோர் நெறிபிறழ்ந்து, தறிகெட்டு காட்டாற்று வெள்ளமாக புரண்டு வரும் சமூகத் தீமைகளுக்குள் வன்முறையாளர்களாக, சீரழிவாளர்களாக சிக்குண்டு அள்ளுண்டு போகின்றனர்.

போரை விடவும் கொடூரமான விளைவுகளை வருங்காலத்தில் நாம் சந்திக்கப்போகின்றோம் என்பதற்கான சமிக்ஞைகள் நாலாபக்கமும் நன்கு தெரிகிறது.

நாம் இழந்துபோனவைகள் ஏராளம். அவற்றை யாராலும் எப்பொழுதும் எமக்காக நிரப்பமுடியாது. ஒரு தூய மானுட விடுதலையின் மகத்துவத்தில் நாம் கொடுத்த விலைகள் மதிப்பில் அடங்காதது. இருந்தும் கணக்கிடப்படவேண்டியது. போர்க்காலத்திலும் இளையோரே அதிகம் அழிந்தனர். இன்றைய சூழலிலும் ஆழ்கடலெனப் பெருக்கெடுக்கும் சமூகச் சீரழிவுகள் மற்றும் வீதி விபத்துக்கள், களியாட்டங்கள் என்பவற்றிலும் இளையோரே மாய்கின்றனர்.

கடந்தவைகள் கடந்தவைகளாகவும், நடந்தவைகள் நடந்தவைகளாகவும் இருக்கட்டும். இனி எமது இளைய தலைமுறைக்காய் நாம் காண்பவை, சொல்பவை, செய்பவை எல்லாம் கல்லறைகளைக் காலியாக்கி இயேசுவைப் போல் உயிர்ப்படைவதாக அமையவேண்டும். இயேசுவின் உயிர்ப்பு நம்மிடம் கேட்டு நிற்கும் கடனும், கடமையும் இதுவாகும்.

எனினும், சிதைக்கப்பட்ட எமது சிதைவுகளிலிருந்து, வடுபட்ட எமது வதைகளிலிருந்து எமக்கு உயிர்த்தெழுகை சாத்தியமா என்பதே வினாவாகும். இளையோர் ஆண்டில் உயிர்ப்போம் இயேசுவுடன்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# எமது ஊழியங்கள் பலன்கொடுக்க மரியாவின் உடனிருப்பே அச்சாரமாகும்

## மரியாவின் சேனையினரின் அர்ப்பண விழாவில் குருமுதல்வர்



யாழ். மறைமாவட்ட மரியாயின் சேனையினரின் ஆச்சேஸ் விழா கடந்த 18.02.2018 அன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் மரியாயின் சேனையின் யாழ் மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி றெஜிராஜேஸ்வரன் அடிகளார் மற்றும் கொமிற்சிய தலைவர் திரு மரிய கருணைநாயகம் ஆகியோரின் வழிநடத்தலில் நடைபெற்றது.

விழாவின் ஆரம்ப நிகழ்வில் கலந்து சிறப்பித்த யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தனது சிறப்புரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குருமுதல்வர் தனது உரையில் மரியன்னை எமது பணிவாழ்வைப் பொறுப்பெடுத்து நாம் பலனுள்ள ஊழியம் செய்ய எங்களுக்காக எப்போதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் எனவும், மரியாவின் உடனிருப்புத்தான் மரியாயின் சேனையை இன்றுவரை ஒரு உயிரோட்டமான பக்திச் சபையாக திகழ வைத்துக் கொண்டிருப்பதாகவும் மேலும் கூறினார்.

இந்நிகழ்வில் திருப்பலி நிறைவேற்றிய அருட்பணி யூஜின் பிரான்சிஸ் அடிகளார் தனது மறையுரையில் இவ்விழாவில் மரியாயின் சேனையினர் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டுள்ளமை மகிழ்ச்சி தருவதாகத் தெரிவித்தார்.

இவ்விழாவில் மரியாயின் சேனையினர் ஒவ்வொரு பிரசீடியங்களாக அன்னை மரியாவின் சொரூபத்தைச் சூழ்ந்து நின்று "எம் அரசியே! எம் தாயே! நாம் உமக்குச் சொந்தம் எம்முடையதெல்லாம் உமக்கே சொந்தம்" என பக்தி பூர்வமாக தமது வாக்குறுதியைப் புதுப்பித்தமை அருள்நிறை காட்சியாக அமைந்திருந்தது.

எண்ணூறுக்கும் மேற்பட்ட மரியாயின் சேனை அங்கத்தவர்கள் விழாவில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் அமைப்புக்கள் பொறுமையுடனும் பொறுப்புடனும் செயற்பட்டு பயணிக்கவேண்டிய காலமிது

## - இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவிப்பு

நமது நாட்டில் சமகாலத்தில் ஏற்பட்ட அரசியல் மதங்களுக்கிடையிலான அசாதாரண நிலை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது கருத்தினைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கை நாட்டில் கிளர்ந்துள்ள இந்நிலை குறித்து நாம் தெளிந்த அறிவுடன் எதிர்காலத்தை முன்னுணர்ந்து செயற்பட வேண்டும். அதே போல் இறந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களை கருத்திற்கொண்டு மனிதாபிமானம் நிறைந்தவர்களாகவும், புத்தித் தெளிவுள்ளவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

பல்வேறுபட்ட இனங்கள் மற்றும் மதத்தவர் பரந்து வாழும் எம் நாட்டில் ஒற்றுமையாக வாழவேண்டும் என வெளிநாட்டவர்கள் எமக்கு சொல்லித்தர தேவையில்லை. அவை எமது மதங்களின் மதிப்பீடுகளிலும், கொள்கைகளிலும் வெளிக்காட்டப்படும் படிப்பினைகளாகும்.

எனவே நாட்டின் நிகழ்கால நிலைகுறித்து கிளர்ச்சிகளைச் செய்வதற்கென்றே தாகத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கு மேலும் கிளர்ச்சியை, தீயைப் பற்றியெரியச் செய்ய வாய்ப்புக்களை நாம் உருவாக்கிக் கொடுக்கக்கூடாது என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கும் மற்றும் மதத்திற்கும் கேட்டை, அவமானத்தை வருவிப்பதோடு அவற்றிற்கு செய்யும் துரோகமாகவும் அமைகின்றன.

எம் நாட்டின் மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் எல்லா விதமான அமைப்புக்களிடமும் கேட்டுக் கொள்வது மிகவும் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்பட்டு பயணிக்க வேண்டிய காலம் என்பதைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்பதே. அதற்கான அனைவரினதும் ஒத்துழைப்பையும், ஆன்மீக ரீதியிலான செபத்தையும், இறை ஆசீரையும் வேண்டி நிற்கின்றோம்.

# முல்லைத்தீவு மறைக்கோட்ட இளையோருக்கான தவக்கால தியானம்

முல்லைத்தீவு மறைக்கோட்ட இளையோருக்கான தவக் கால தியானம் கடந்த 04.03.2018 புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த அருட்திரு ஜெயக் குமார் தலைமையிலான இறைதியான குழுவினர் இத்தவக்கால தியானத்தை நெறிப்படுத்தினர். இந்நிகழ்வில் முல்லைத்தீவு மறைக்கோட்ட பங்குகளிலிருந்து 250 இற்கும் அதிகமான இளையோர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வின் இறுதியில் முல்லைத்தீவு மறைகோட்ட இளை யோர் ஒன்றியத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது.

# பரந்தன் பங்கில் பொதுநிலையினர் குழு உருவாக்கம்



கடந்த 04.03.2018 அன்று பரந்தன் பங்கில் பொதுநிலையினர் குழு உருவாக்கல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வு பரந்தன் பங்குத்தந்தை அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அவர்களின் தலைமையில், கிளி மறைக்கோட்ட இயக்குனர் அருட்பணி யூட் அமலதாஸ் அவர்களின் வழிநடத்துதலில் நடைபெற்றது. இதில் வளவாளர்களாக அலெக்ஸ், கீதபொன்கலம், யேசுபிரியல், போல்றொபின் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# யாழ் ஆயரின் உயிர்ப்பு பெருவிழா செய்தி



“உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்.”
(லூக். 24: 5,6)

ஆண்டவன் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டவன் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவே கத்தோலிக்க திருச்சபையில் கொண்டாடப்படும் விழாக்களில் முக்கியமானதாகும்.

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1 கொரி. 15: 14) எனப் புனித பவுல் கூறுகின்றார். இதுவே எமது விசுவாச வாழ்வின் அடிப்படையாக இருக்கிறது. புனிதவார வெள்ளி இல்லாமல் உயிர்ப்பு ஞாயிறு இல்லை. அதாவது இயேசுவின் பாடுகள், மரணம் இல்லாமல் உயிர்ப்பு இல்லை. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை.

இயேசு தந்தையை முற்று முழுவதுமாக நம்பி, தன்னை முற்று முழுவதுமாக கையளித்து, தந்தையின் திட்டத்தை நிறைவேற்றி, எம் எல்லோருக்கும் முன்னுதாரணமாக வாழ்ந்து, கீழ்ப்படிதலை எமக்குக் கற்றுத் தந்திருக்கிறார். தன்னுடைய இயலாமையிலும் "என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" (மத். 26: 39) என்று கூறி இறைவனிடம் வேண்டினார்.

எமது வாழ்க்கையில் வருகின்ற துன்ப, துயரங்களைக் கண்டு மனம் சோர்ந்து போகாது உயிர்த்த இயேசுவின் உடனிருப்பு எப்போதுமே இருக்கின்றது என்ற நம்பிக்கையுடன் வாழ வேண்டும். நாம் ஒவ்வொருவரும் மூடி வைத்திருக்கின்ற கல்லறைகளில் இருந்து உயிர்பெற்று எழுகின்ற சீடர்களாக மாற முயல வேண்டும். கடவுளையும், அயலவரையும் அன்புசெய்து, ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக் கொண்டு வாழுகின்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு மிகவிரைவில் நல்ல செய்தி உயிர்ப்பின் செய்தியாக கிடைக்க இறைவனைப் பார்த்து மன்றாடி நிற்கின்றேன்.

உயிர்த்த ஆண்டவரின் அன்பும் அமைதியும் உங்கள் அனைவரோடும் என்றும் எப்போதும் இருப்பதாக.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,
பேரருட்கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
யாழ் ஆயர்

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உயிர்ப்பு பெருவிழா செய்தி - 2018

மீண்டுமொருமுறை திருவழிபாட்டு ஆண்டின் உச்சக்கட்டமான உயிர்ப்பைக் கொண்டாடி நசரேத்தூர் இயேசுவை உயிர்த்த ஆண்டவரும், மீட்பரும் எனப் பறைசாற்றுகின்றோம். அதன்படி தூதர்களின் வார்த்தைகள் எம் காதுகளில் மீண்டும் ஒலிக்கட்டும். "உயிரோடு இருப்பவரை இறந்தவர் மத்தியில் தேடுவான் ஏன்? அவர் இங்கு இல்லை. அவர் உயிர்த்து விட்டார்" (லூக் 24:5) கிறிஸ்துநாதரின் உயிர்ப்பில் அவர் சாவை வென்று எமக்குப் புதிய நம்பிக்கையை அளித்தமைக்காக நாம் அகமகிழ்வோம். கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவானது நாம் பாவத்திற்கும் சுயநலத்திற்கும் மரித்து கிறிஸ்துவில் ஒரு புதிய வாழ்வை தொடங்க எமக்கு அழைப்பு விடுகிறது.

இயேசுவின் மீதான எமது விசுவாசம் எம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட விலைமதிக்க முடியாத கொடையே என்றால் மிகையாகாது. இயேசு கிறிஸ்துவின் மீதான எமது விசுவாசத்திற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் காலமே உயிர்ப்பின் காலமாகும்.

கடவுள் நம் ஒரே பேறான மகன் மீதான விசுவாசத்தை எமக்கு அளித்துள்ளார் எனும் போது அது மாபெரும் கொடையேயாகும். ஆகவே நாம் அவ்விசுவாசத்தை எமது தலைமுறையினருக்கு பரிசாகப் பெற்றுத்தருவதில் பங்களிப்பவர்களாகவும், நன்றி செலுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறாக, இயேசுவில் விசுவாசங் கொண்டுள்ளோம் எனும் இவ்வாசீரை எண்ணி மகிழ்ந்துபுகழ்பாடவேண்டியதும் எமது கடமையாகும். மேலும் இவ்வாசீரை எம் நாளாந்த வாழ்வில் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது எமது பொறுப்பாகவும் அமைகின்றது.

உயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலமானது இயேசுவின் மீதான அறிவை ஆழப்படுத்தவும், உயிர்த்த மீட்பர் எம்மத்தியில் இருக்கிறார் என்ற உணர்வைப் புதுப்பிக்கவும் அழைப்பு விடுக்கிறது.

உயிர்த்த மீட்பர் மீதான எமது விசுவாசம் எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் முகங்கொடுக்கும் கஸ்ட துன்பங்களில் மற்றும் பிரச்சினைகளில் துணிவுடனும், மன உறுதியுடனும் செயற்படவும், அவரும் எம்மோடு பயணிக்கிறார் (லூக் 24 13:32) என்ற நம்பிக்கையையும் அளிக்கிறது.

உயிர்த்த ஆண்டவரின் இவ்வுடனிருப்பை உயிர்ப்பு எமக்கு பறைசாற்றுகிறது. மேலும் அவர் எமது மகிழ்ச்சியிலும், துன்பத்திலும் பங்கெடுக்கிறார் என்பதால் இவ் வுயிர் ப் பின் மகிழ்ச்சிக் காலம் எமது வாழ்வில் உண்மையான அர்த்தத்தையும் அளிக்கிறது.

உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குத் தோன்றி அவர்களுக்கு அமைதியை கொடையாகக் கொடுத்தார். நாமும் அக்கொடையைக் கேட்டு நிற்போம். நம் நாட்டுத் தலைவர்கள் சாதி, மத பேதங்களைக் கடந்து எல்லோரும் ஒன்றுபட்டு வாழ நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வழிவகுக்க வேண்டும்.

பௌதீக ரீதியான வளர்ச்சியை சில நிலைகளில் நாம் பெற்றுள்ள போதிலும் எம் தாய்நாட்டில் பணம் படைத்தவர் மற்றும் ஏழைகளுக்கிடையிலான இடைவெளி மிகைப்படுத்தப்பட்டுள்ளதையும் மறுக்க முடியாது.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட் களின் விலைகளின் பாரிய உயர்வினால் ஏழைகளின் நாளாந்த வாழ்க்கை கடினமாதாக வும், கசப்பானதாகவும் மாறியுள்ளதையும் மறுக்க முடியாது. எமது கிறிஸ்தவ சீடத்துவம் துன்புறுவோரில் இயேசுவின் முகத்தைக் கண்டு அக்கறை காட்டவும் பணிபுரியவும் எம்மை அழைப்பதை நாம் மறந்துவிடலாகாது.

எமது உயிர்ப்பின் மகிழ்ச்சி கிறிஸ்தவ சீடத்துவத்தின் கடமையை ஆழமாக எமக்கு உணர்த்த வேண்டும். எம்மைச் சூழவுள்ளோரின் தேவைகளை நிறைவேற்ற நாம் பாடுபட வேண்டும். விசேடவிதமாக எமது சிறுவர்கள் மதுபோதை வஸ்துக்குள்ளும், கலாசார சீரழிவுகளுக்கும் வெகுவாக உட்படும் இவ்வேளையில் அவர்களைக் காக்க நடவடிக்கை எடுப்பது எமது பொறுப்பாகும்.

மேலும் எமது சாட்சிய வாழ்வின் மூலமாக கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் அழகை ஏனையோரும் கண்டுணர்வார்களாக. உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாகவும் அமைதியின் தூதர்களாகவும் செயற்பட முன்வருவோம்.

எல்லோருக்கும் எமது உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களும், உயிர்த்த ஆண்டவரின் அமைதியும் மகிழ்ச்சியும் உரித்தாகுக.

## யாழ் மரியன்னை பேராலய இளைஞரால் நடாத்தப்பட்ட வீதி சிலுவைப்பாதை காட்சிகள்



யாழ் மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் தவக்காலத்தில் நடாத்தப்பட்ட வீதி சிலுவைப்பாதை காட்சிகள் புனித செபஸ்ரியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி, புனித உத்தரிய அன்னை ஆலயம் ஊடாக பேராலயத்தை வந்தடைந்தது. இதிலே உப பங்குகளைச் சேர்ந்த இளைஞர்கள் கலந்து சிறப்பித்தனர்.

சிலுவைப்பாதை நிலைகளை மக்கள் தியானித்து சிந்திக்கத் தூண்டும் வகையில் திருச்சொரூபங்கள் மூலமாகவும், தமது தத்ரூபமான நடிப்பினாலும் இளைஞர்கள் வடிவமைத்திருந்தமை சிறப்பம்சமாகும்.

## நல்லன செய்து, வாழ்வுபெற உயிர்த்தெழுவோம்!
## குரு முதல்வரின் உயிர்ப்புவிழா செய்தி

"காலம் வருகிறது. அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர். நல்லன செய்தோர் வாழ்வுபெற உயிர்த் தெழுவர் தீயன செய்தோர் தண்டனைத் தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர்"

அனைவருக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். "நான் என் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" (யோவான் 10:10) என்று கூறிய இயேசுவின் வார்த்தைகளில் அடங்கியுள்ள நிறைவாக வாழ்வைப் பெற என்பதன் அர்த்தம் அவரின் உயிர்ப்பில்தான் வெளிப்படுத்தப்படுகிறது.

இவ்வுலகில் எதுவுமே தரமுடியாத, எதிலுமே காண முடியாத முழுநிறைவை எம் ஒவ்வொருவரினதும் உயிர்தெழுதலிலும் தான் நாம் காண முடியும் என்பதே இயேசுவின் உயிர்ப்புத் தரும் தெளிவான செய்தியாகும்.


அதேவேளையில் இயேசுவின் இன்னொரு எச்சரிக்கையான வார்த்தைகளையும் நாம் மறந்துவிட முடியாது. "காலம் வருகிறது. அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர். நல்லன செய்தோர் வாழ்வுபெற உயிர்த்தெழுவர்; தீயன செய்தோர் தண்டனைத் தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர்" என்று கூறும் இயேசு எமது மனமாற்ற வாழ்வு தீயதை விட்டுவிடுதலின் அவசியம் விருப்பத்துக்குரியதொன்றல்ல மாறாக கட்டாயமான அழைப்பு என்பதை எமக்கு வலியுறுத்துகின்றார்.



தனது போதனை, வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றின் விளைவாக நல்லதைச் செய்யும் ஆற்றலையும் அருளையும் அவர் எம் ஒவ்வொருவருக்கும் நிறைவாகவே தந்துள்ளபடியால், தீயன செய்து தண்டனைத் தீர்ப்புப் பெறுவது எமது சொந்தத் தெரிவாகிய அலட்சிய வாழ்வேயன்றி வேறில்லை. நல்லன செய்து வாழ்வுபெற, உயிர்த்தெழ எம்மிடம் நிறைவாகவேயுள்ள வரங்களைப் பயன்படுத்தி வாழ, உயிர்த்தெழுந்து மாட்சிமையோடு வாழும் இயேசு உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆசி அளிப்பாராக! அல்லேலூயா!

அருட்பணி.
ப. யோ. ஜெபரட்ணம்.
குரு முதல்வர்

# ஆளுமையின் அவசியமும் அவசரமும்



அருட்பணி T.ரவிராஜ்

### கம்பனின் ஆளுமை

2016 ஆண்டில் கம்பன் விழாவிற்கு ஆசியுரை வழங்குமாறு எனக்கு அழைப்பிதழ் ஒன்று வந்தது. நானும் அவ்வழைப்பினை ஏற்றுக்கொண்டு அங்கு சென்றிருந்தேன். அந்நிகழ்வில் பல உரைகள் நடந்தன. அவற்றில் பிரதான உரையாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் உரை அமைந்தது. தனது உரையிலே கம்பவாரிதி முக்கியமான கருத் தொன்றை தமிழ் சமூகத்தின் முன் வைத் தார். அதாவது தமிழர் தேசத்திலே இன்று பெரும் தலைமைத்துவ வெளி (Leadership vacuum) ஒன்று ஏற்பட்டுள் ளது. இத்தலைமைத்துவ வெளிக்குள்ளே நாம் எதிர்பாத்திராத, சந்தித்திராத புதிய, புதிய சமூகத்தீமைகள்: களவு, கொலை, காமுகர்களின் களியாட்டம், போதை, ஏமாற்று நடவடிக்கைகள், சுரண்டல் இவை போன்ற பலவிதமான, நாம் முன்னர் ஒரு போதும் சந்தித்திராத பிரச்சினைகள் தலை விரித்தாடும். இதுதான் இந்தத் தலைமைத் துவ வெளியில் ஏற்படுகிற சமூக அனர்த்தம். இதையே நாம் பலதடவைகளில் கலாசார சீரகேடுகள் என்று சொல்லுகிறோம்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, இப்படியெல்லாம் கேட்கும்போது எம் மனங்களில் தோன்றும் இயல்பான அச்சம் யாதெனில்; நாம் அழிந்து விடுவோம், நாம் மடிந்து விடுவோம், இனி எம்மால் மீள முடியாது என்கிற எதிர்மறை எண் ணங்களே. இந்த அச்சம் தவறானது. நாம் ஒருபோதும் மடிந்து போகவும் போவதிலை, அழிந்து போகவும் போவதில்லை. மாறாக பாதிக்கப்பட்ட, நொந்துபோன சமூகமாக ஒன்றுபட்டு சிந்தித்துச் செயற்பட வேண்டிய அடிப்படைத் தேவையொன்று உண்டு. அதாவது ஆளுமை நிறைந்த தமிழர் சமூகம் ஒன்றை நாம் உடனடித் தேவையாகக் கொண்டு, அதை நாம் கட்டியெழுப்ப வேண்டும். நொந்துபோயுள்ள எம் சமூகத்தினுள் வாழும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அடிமைப்படாத, தமித்துவமான மனிதன் நீ என்னும் உணர்வை ஓர் ஊக்க மாத்திரை போன்று ஊட்டி வளர்க்க வேண்டும்.

கம்பனின் ஆளுமையை முன்னு தாரணமாக வைத்தார் தனது உரையில் கம்பவாரிதி. கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவித்துவம் கண்டு வியப்புக்கொண்ட சோழ மன்னன், கம்பனுக்கோர் அழைப்பு விடுத்தான் தனது அவைக்கு . கம்பன் அவையில் அமர்ந்திருக்க, அங்கே சோழ மன்னன் வருகை தருகிறான் அவைக்கு. சோழ மன்னன் வரவு கண்டு அவையோர் அனைவரும் எழுந்திருக்க, கம்பன் மட்டும் கர்வமுடன் கம்பீரமாக அமர்ந்திருந்தான். இந்த நிகழ்வைக் கம்பனின் ஆணவம் என்று பார்ப்பவர்களும் உண்டு, ஆளுமை என்று பார்ப்பவர்களும் உண்டு, நாங்கள் ஆளுமை என்றே பார்ப்போம்.

அதாவது, மன்னனிடம் இருப்பதோ அதிகாரமும், பணமும். அவற்றை என்றோ ஒரு நாள் மன்னன் இழந்து போகக்கூடும். ஆனால், கம்பனிடம் இருப்பதோ அவனது கல்விச் செல்வம். இதனால் அவன் பெற்றிருக்கும் அறிவு, கவித்துவம் இவற்றை ஒருபோதும் கம்பனிடமிருந்து யாரும் பறித்துவிட முடியாது.

இங்கோ சோழ மன்னனை விட, கம்பன் ஒரு படி மேலே ஏறி நிற்கிறான். இதுதான் அவனது ஆளுமை என்றுரைத்த கம்பவாரிதி, கம்பனைப் போன்று ஆளுமை மிக்க தலைமைத்துவங்களை உருவாக்குவது இன்றைய நொந்துபோன எம் தமிழ் சமூகத்தின் காலத்தின் தேவையென்று ஆழுத்தமாகவும், அர்த்தமாகவும் சொன்னார். அது உண்மையே. "கற்றவர்களுக்கோ சென்ற இடமெல்லாம் மதிப்பு" எம் சமூகத்தின் பெரும் சொத்து "கல்வியே" என்பதை நாம் இங்கே எங்கள் நினைவிற் கொள்வோம்.

### நாசரேத்து இயேசுவின் ஆளுமை

ஒருமுறை எங்கள் ஓய்வுநிலை மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை சொன்னார் கிறிஸ்து ஒருவரைத்தவிர இவ்வுலகில் எமக்கு ஓர் முழுமையான மாதிரி (Perfect Model) அல்லது முழுமையான முன் உதாரண மனிதர் இருந்ததுமில்லை, இருப்பது மில்லை, இருக்கப்போவதுமில்லை. கிறிஸ்துவின் ஆளுமையே முழுமை யான மனித ஆளுமை என்பது வெள்ளி டைமலை. எனவே வேதாகமப் பின்ன ணியில் இயேசு என்னும் நாசரேத்து மனித னின் ஆளுமை பற்றி சற்றுச் சிந்திப்போம்.

### ஜெருசலேம் தேவாலயத்தில் சிறுவன் இயேசு

(லூக் 2:41-52)

சிறுவன் இயேசுவைக் காண வில்லை, தேடி அலைந்தனர் அவரது பெற்றோர். இறுதியில் அவரை அவர்கள் கோவிலிலே கண்டார்கள். "அவர் போத கர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர். அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர்" (லூக். 2:46-48) இங்கே, இயேசு என்னும் நாசரேத்தூர் மனிதன் தன்னை உருவாக்கிக் கொள்ளும் ஆரம்ப நிலை இது. இந்த மனித உரு வாக்கத்தில் அவரது ஆரம்பநிலைத் தேடல் அது இறை வன் நாசரேத்து இயேசு ஓர் மனிதனாய் இறைபடிப்பினைக்கு செவிமடுத்து, புரியாத விடயங்களை கேள்விக் கணைகள் தொடுத்து தெளிவுபடுத்திப் புரிந்து கொள்ளும் திறன் அவரது ஆளுமை வளர்ச்சியில் ஆணித்தரமான படிநிலையே.

பெற்றோருடன் வீடு சென்ற சிறு வன் இயேசு, அவர்களுக்குப் பணிந்து நடந்தார் என்று வேதாகமம் கூறுகிறது. (லூக் 2:51) இங்கே கவனிக்கப்பட வேண் டிய விடயம் "கீழ்ப்படிவு, பணிவு" "கீழ்ப் படிதல் பலியைவிடச் சிறந்தது" (1 சாமு 15:22) ஆளுமை விருத்தியில் கீழ்ப்படிவு என்பது அத்தியாவசியமானது: பல விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு பணிவு என்னும் பண்பு மிகவும் அவசிய மானது. பணிவு ஓர் சிறந்த பண்பு. அதிலும் பெற்றோருக்கு கீழ்ப்படிதல் அனைத்திலும் மிகச் சிறந்தது. அதனால் பெற்றோரின் ஆசி பிள்ளைகளுக்குக் கிடைக்கும். அது அவர்களை வாழவைத்து வளரவைக்கும் : "தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங் களை நிலைநாட்டும். தாயின் சாபம் அவற்றை வேரோடு பெயர்த்தெறிந்துவிடும்." (சீராக் 3:9)

இயேசு என்னும் நசரேனின் வளர்ச்சி வெறுமனே உடல்சார் வளர்ச்சி யல்ல, அறிவுசார் வளர்ச்சியுமல்ல. மாறாக உடல் உள வளர்ச்சியாகும். "இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:52) கடவுளுக் கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ் வதே ஆளுமை வளர்ச்சியின் அதி உன்னத நிலை. ஞானம் என்பது எங்கிருந்து வருகி றது? "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் .." (நீ.மொ. (:10)

> "கீழ்ப்படிவு, பணிவு" "கீழ்ப்படிதல் பலியைவிடச் சிறந்தது" (1 சாமு 15:22) ஆளுமை விருத்தியில் கீழ்ப்படிவு என்பது அத்தியாவசியமானது: பல விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு பணிவு என்னும் பண்பு மிகவும் அவசியமானது. பணிவு ஓர் சிறந்த பண்பு. அதிலும் பெற்றோருக்கு கீழ்ப்படிதல் அனைத்திலும் மிகச் சிறந்தது. அதனால் பெற்றோரின் ஆசி பிள்ளைகளுக்குக் கிடைக்கும். அது அவர்களை வாழவைத்து வளரவைக்கும். தந்தையின் ஆசி பிள்ளை களின் குடும்பங்களை நிலைநாட்டும். தாயின் சாபம் அவற்றை வேரோடு பெயர்த்தெறிந்துவிடும்.

இயேசு ஓர் நாசரேத்தூர் மனிதனாக தெய்வபயம் என்னும் மன நிலையை யாரிடமிருந்து பெற்றுக் கொண் டார்? தனது பெற்றோரிடமிருந்தே அவர் அதைப் பெற்றுக் கொண்டார். அவரது தாயார், அன்னை மரியா - அவர் ஓர் ஆண்டவரின் அடிமை (லூக் 1:32) அவ ரது தந்தை யோசேப்பு, அவர் ஓர் நேர்மை யாளர் (லூக். மத் 1:19) இன்று அநேகமான பெற்றோர்கள் எதற்கு அடிமையாக இருக் கிறார்கள்? எவ்வளவு தூரம் நேர்மை யாளர்களாக இருக்கிறார்கள் ? என்பதுதான் இங்கு எம்முன் சிந்தனைக்காக வைக் கப்படும் முக்கியமான கேள்விகள். "இதோ! நீர் விரும்புவது உள்ளத்து உண்மையையே: மெய்ஞானத்தால் என் மனத்தை நிரப்பும்" (திபா 51:6) எங்கள் குழந்தைகளை கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவர்க ளாக எங்களால் உருவாக்க முடியுமா?

### ஜெருசலேம் தேவாலயத்தில் இளைஞன் இயேசு

(மத் 21:12-17, மாற் 11:15-19, லூக் 19 : 45 -42, யோவா 2:13 -22)

இளைஞன் இயேசு ஜெருசலேம் தேவாலயத்தினுள் நுளைந்தபோது, அங்கு நடப்பவை கண்டு அவரது உள்ளம் பற்றி எரிகிறது. சந்தையாய் மாறும் சாக்கடை நிலைகண்டு சவுக்கடி கொடுத்து சரித்திரம் படைக்கிறார். யோவான் நற்செய்தியாளர் கானான் திருமண நிகழ்வின் அடுத்த நிகழ்வாக கோவிலைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வைக் கொண்டு வந்து வைக்கிறார். இயேசுவின் பணிவாழ்வின் முதற் செயற்பாடு கோவிலைத் தூய்மைப் படுத்துதல். சமயப் பின்னணி கொண்ட எல்லாச் சமூகங்களிலும் ஒரு மனிதனின் இரண்டாம் நிலை உருவாக்கல் களம் ஆலயங்களே. ஆலயங்கள் ஆன்மீக தலங்களே ஒழிய, வியாபார சந்தைகள் அல்ல. இங்கே இயேசு என்னும் நாசரேத்தூர் மனிதனின் ஆளுமை ஓர் சமூக சீர்திருத்தவாதியாக அவரது ஆன்மீகத்திலிருந்து பொங்கி எழுகிறது. "உம் இல்லத்தின் மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்" (யோவா 2:17) எங்கள் ஆலயங்களைத் தூய்மைப் படுத்த புதிய இயேசுக்களை உருவாக்க வேண்டும். அன்றேல் புதிய இயேசுக்க ளாக உருமாற வேண்டும்.

### பிலாத்துமுன் இயேசு

(மத் 27:1-2, 11 -14, மாற் 15: 1-5, லூக் 23: 1-5, யோவா 18: 28-38, 19 :,1-11)

பிலாத்து முன் ஓர் கைதியாக கையளிக்கப்பட்ட இயேசுவுடன் பிலாத்து வின் உரையாடல் மிகவும் சுவாரசிய மானது. இயேசுவின் ஆளுமையின் வெளிப்பாடு துல்லியமாகும் அழகிய தருணங்களில் இதுவும் ஓர் தருணம். இந்த உரையாடலின் சில தருணங்களை கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போம்.

"... எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல... " (யோவா 18:36) இயேசுவிடம் ஏதோ ஒரு ஆளுகை இருந்திருக்கிறது என்பது இங்கே தெளிவாகத் தெரிகிறது. அந்த ஆளுகைக்கும், உலகின் அரசுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதும் தெளிவு. "அரசன்", "அரசு" என்கிற நிலைப் பாடுகள் அற்ற ஓர் ஆட்சிமுறை. இவ்வாட்சி யில் பேசப்படும் ஒரேயொரு பேசுபொருள் "உண்மை". "... உண்மையை எடுத் துரைப்பதே எனது பணி..." (யோவா 18:37). ஆகவே இயேசுவின் "அரசாட்சி" என்பது அதிகாரம் சார்ந்தது அல்ல, மாறாக பணி சாந்தது. அவரது பணியின் ஒரே யொரு நோக்கம் உண்மையை எடுத்து ரைப்பதே. அந்த உண்மைத் தன்மை தான் அவர் உலகின் மக்கள் யாருக்கும் அடிமை அல்ல என்பதை இடித்துரைக் கிறது. "மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என்மேல் எந்த அதிகாரமும் இராது" (யோவா 19:11) இயேசுவின் ஆளுமையின் உன்னத நிலை. அவர் ஓர் இலட்சியவாதியாக இருப்பது "...உண் மையை எடுத்துரைப்பதே எனது பணி, இதற்காகவே நான் பிறந்தேன். இதற்கா கவே உலகிற்கு வந்தேன்...." (யோவா 18:37). ஏன் வாழ்வின் நோக்கத்தை அறிந்து கொள்பவரே இலட்சியவாதி.

### முடிவுரை

உண்மை ஒருபோதும் உறங்குவது மில்லை. இலட்சியவாதிகள் ஒருபோதும் மடிவதும் இல்லை, அடிமைகளாவது மில்லை. இங்கே தான் சாவு இயேசு வைக் கண்டு அஞ்சியது, இங்கே தான் இயேசுவும் சாவை வெற்றி கொண் டார். ஆளுமையின் உயர்நிலை இலட் சியத்தோடு வாழுதல். அந்த இலட்சியம் உண்மையோடு நெருங்கிய உறவு நிலை கொள்ளும்போது மீண்டும் மீண்டும் உயிர் பெற்றெழுகிறது என்பதே உண்மை. உண்மையின் உறைவிடம், அது கல்ல றையல்ல. அதனால்தான் இயேசு என்னும் அந்த உண்மையை அவர்களால் கல்ல றைக்குள் அடைத்து வைக்க முடிய வில்லை. உண்மை மீண்டும், மீண்டும் உயிர்பெற்று எழும் என்பதே உண்மை.



# உயிர்ப்பு தரும் புது வாழ்வு

**அருட்பணி**
**மா.றேஜிஸ் இராசநாயகம்**

சிலுவையிலே அறையுண்ட அதே கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர் பெற்றுவிட்டார். அவருடைய உயிர்ப்பினால் உலகம் முழுவதும் புத்துயிர் பெறுகின்றது. தனக்குள் இருந்த உயிரை உலகம் புதுப்பித்துக் கொள்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பால், கிறிஸ்துவின் உயிர்ப்பில் அது நிகழவின்றது. கடவுளோடு ஒப்புரவான வாழ்வுதான் உயிர்ப்புத்தரும் புதுவாழ்வு! கடவுளோடு நாம் ஒப்புரவாகிவிட்டோம். முறிந்த உறவு இணைக்கப்பட்டுவிட்டது என்பதைக் காட்டும் வாழ்வு தான். கிறிஸ்துவில் நாம் வாழும் வாழ்வு. நம்மில் கிறிஸ்து வாழும் வாழ்வு இதுதான் உயிர்ப்புத்தரும் புதுவாழ்வு.

## அப்போஸ்தலர்களும் புதுவாழ்வும்

"கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு முதன் முதலாக சான்றுபகர்ந்தவர்கள் அப்போஸ்தலர்கள். இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் அப்போஸ்தலர்கள் மனம் மாறுகின்றனர். கிறிஸ்துவுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு, கிறிஸ்துவை அவர்கள் அறிந்திருந்த தன்மை மாறுகின்றது. இவ்வுலகில் அவருடன் வாழும் போது ஒரு அளவிலேதான் அப்போஸ்தலர்கள் இயேசுவைப் புரிந்து வைத்திருந்தனர். கிறிஸ்துவைப் பற்றிய அவர்களது அறிவு அதற்குமேல் போகவில்லை. ஆனால் கிறிஸ்து உயிர்த்த பின் அவரைப் பற்றியபுது அறிவு அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. அவரை விசுவாசித்தவர்கள் மட்டுமே, கிறிஸ்துவின் புதுத்தன்மையை, உயிர்ப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது. தான் முதலில் சொல்லியவைகளின் பொருளை அவர்களுக்குத் தெளிவாக்குகின்றார். (லூக்.24:8) அவர்களது அகக் கண்களைத் திறக்கின்றார் (லூக் 24:31-35) அப்புது அறிவை முழுமைப்படுத்தும் பணியை தூய ஆவிக்கு விட்டு விடுகின்றார். இதனால் மகிழ்ச்சி அவர்களது தனிச் சொத்து ஆகி விடுகின்றது. அவர்களின் தன்னலம் மறைந்து புது சகோதரத்துவம் மலர்ந்து புதுச் சமூகம் உருவாகின்றது. (தி.ப.2:42-46)

## திருச்சபையின் புதுவாழ்வு

கிறிஸ்துவின் இடத்தைத் தூய ஆவியானவர் நிரப்புவதினால் கிறிஸ்துவின் பிரிவை அப்போஸ்தலர்கள் உணர்வதில்லை. கிறிஸ்து அவர்களோடு இருப்பதாக உணர்ந்து கிறிஸ்துவில் வாழ, கிறிஸ்துவுக்காக வாழத் தொடங்குகின்றனர்.

கடவுளின் திட்டப்படி புனித சின்னப்பர் தோன்றுகின்றார். கிறிஸ்துவை சந்தித்த இவர் கிறிஸ்தவ சபைகளை உருவாக்குகின்றார். "கிறிஸ்துவில் வாழ்வது" பற்றி கற்றுத் தருகின்றார்.

## கிறிஸ்துவின் வாழ்வு

"கிறிஸ்துவில்" என்ற சொற்றொடரை புனித சின்னப்பர் தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தைத் தவிர மற்ற எல்லாத் திருமுகங்களிலும் பயன்படுத்துகின்றார். கிறிஸ்துவின் உயிர்ப்பிலே நாம் கடவுளோடு ஒப்புரவாகின்றோம். கடவுளில் நாம் ஒப்புரவாவதோ கிறிஸ்துவில் இணைவதால்தான் கிறிஸ்துவில் நாம் இணையும்போது அவருடைய உயிர்ப்பில் பங்கு பெறுகிறோம். அப்போது, கிறிஸ்து நம்மில் குடிகொள்கிறார். கிறிஸ்துவின் ஆவி நம்மிலே உறைய வருகின்றார். நாம், அதனால் கிறிஸ்துவில், கிறிஸ்துவின் அன்பில் சமாதானத்தில் வாழத் தொடங்குகின்றோம்.

கிறிஸ்துவில் நாம் வாழத் தொடங்கும் போது அது புது அனுபவமாகிறது, படைப்பாகிறது. நம்மில் கிறிஸ்து வாழ்கிறார். இவ்வாழ்வைத்தான் புனித சின்னப்பர் "புது படைப்பு" "புது வாழ்வு" என்று கூறுகின்றார். "ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், புதியதொரு படைப்பாகிவிட்டான். பழையன கழிந்தன இதோ பதியன தோன்றியுள்ளன.
(2 கொரி 5:17)

## கிறிஸ்துவில் வாழ்வதால் வரும் விளைவுகள்

புதிய வாழ்வு என்பது நாம் கிறிஸ்துவில் கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கையாகும். இப் புதுவாழ்வு நம்மைப் புது மனிதர்களாக்கி, நம்மிலே பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. நம்முடைய இயல்பிலே, இயற்கையிலே, வாழ்விலே வாழும் வழிகளிலே இப் புது வாழ்வு ஊடுருவுகிறது.

## புதிய இனம்

கிறிஸ்துவோடு நாம் புதிய வாழ்வு வாழத் தொடங்கும் போது அவரிலே முற்றிலும் உறைந்து விடுகிறோம்.நம்முடைய உணர்வுகளெல்லாம் அவரில் ஒன்றிக்கின்றன. நாம் அனைவரும் கிறிஸ்துவில் இணையும்போது புதிய இனமாகின்றோம், புதிய குலம் ஆகின்றோம். புதிய குலமாக உருப்பெறுவதால் நம்மிடையே முன்பிருந்த வேறுபாடுகள் மறைந்தே ஆகவேண்டும். கிறிஸ்துவிலே புது வாழ்வு வாழத் தொடங்குவதால் புதிய படைப்பாகின்றோம்.

## இறைவனின் மக்கள்

கிறிஸ்துவில் இணைந்த நாம் அனைவரும் கடவுளின் மக்கள் ஆகின்றோம். 'அப்பா' என்று கடவுளை அழைக்கும் உரிமையைப் பெற்றவர்களாகின்றோம். இந்த உரிமைக்குக் காரணம் தூய ஆவியே. (உரோ.8:15)

## சாவிலிருந்தும் சட்டத்திலிருந்தும் விடுதலை

கிறிஸ்து தனது உயிர்ப்பால் சாவினை வென்று அதன் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார் அதுமட்டு மன்றி, மோயீசன் சட்டத்தின் துணை கொண்டு பரிசேயர் ஏற்படுத்திய வெளி வேடங்களிலிருந்தும், ஆசாரங்களிலிருந்தும் நாம் விடுதலை பெற்றுள்ளோம். அன்பு ஒன்றுதான் அவர் கொடுத்த கட்டளை! சட்டம்!!

## மனமாற்றம்

எவ்வாறு கிறிஸ்துவின் மனிதவதாரம் நம்மிலே மாற்றத்தை, திருப்பத்தை ஆசிக்கிறதோ, அவ்வாறே உயிர்ப்பும் எதிர்நோக்குகிறது. இந்த மனமாற்றம் மனிதனின் உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே, இந்த மனமாற்றம் அவனது ஆன்ம, பொருளாதார, சமூக வாழ்விலே மாற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.

## தூய்மை

மனமாற்றம் ஒரு பொழுதும் மனிதனால் நிகழ்வதில்லை. அதற்கு ஆண்டவரின் அருள் தேவை. அந்த அருளின் உதவியால் தான் புதுவாழ்வு நிலைநிற்க முடியும். விசுவசிப்போர் அனைவரும் ஒரு வகையில் தூயவர்கள்! புனிதர்கள்! (உரோ. 2:7) "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே அர்ப்பணமாக்குகிறேன்" (யோவான் 17:19) என்று வேண்டினார் இயேசு.

## மகிழ்ச்சி

உயிர்ப்பின் மற்றொரு முக்கிய கொடை மகிழ்ச்சியாகும். கிறிஸ்தவன் வாழவேண்டிய புதுவாழ்வின் ஒரு அவசியமான தன்மையும் மகிழ்ச்சிதான். கிறிஸ்தவனுடைய மகிழ்ச்சி அவனைப் புது மனிதனாகக் காட்டுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் மகிழ்ச்சியுள்ளவனாகவே வாழ்ந்தாக வேண்டும். கிறிஸ்தவர்கள் இருக்குமிடத்து மகிழ்ச்சி தெரியவேண்டும். "மகிழ்ச்சியாய் இருங்கள்!" இடைவிடாது செபியுங்கள்! நன்றி கூறுங்கள்" (1 தெசலோ 5:14) "ஆண்டவரில் அகமகிழுங்கள்" மீண்டும் கூறுகின்றேன், அகமகிழுங்கள் காரணம் ஆண்டவர் அண்மையிலுள்ளார்" (பிலிப்பி 4:4) எனவே,மகிழ்ச்சியுடன் நாம் புதுவாழ்வை ஆரம்பிப்போம். புதுவாழ்வில் திளைத்திடுவோம்.

---

# பெற்றோரின் உடன் பயணிப்பே பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சி

அறிவுரைகளை விட ஆயிரக் கணக்கான வகுப்பறைப் பாடங்களை விட நற்செயல்கள் வலிமையானவை. குழந்தைகளுக்கு அவர்களுடைய பெற்றோர்தான் முதல் நாயகர்கள். பெற்றோருடைய நடவடிக்கைகள் மற்றும் அவர்கள் அமைத்து கொடுக்கும் சூழலில் இருந்தே குழந்தைகள் பல புதிய விடயங்களைக் கற்றுக் கொள்கிறார்கள்.



பெற்றோருடைய சொல்லும், செயலும் பிள்ளையினுடைய வளர்ச்சிக்கு பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. எனவே தான் முன்மாதிரிகையான பெற்றோரே மிகச்சிறந்த ஆளுமை மிக்க குழந்தைகளை உருவாக்க முடியும்.

குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பது எல்லோருக்கும் குழப்பமான விடயம் தான். செல்லம் கொடுத்தால் குழந்தைகள் கெட்டுப்போய்விடுவார்கள். கண்டித்துத் தான் வளர்க்க வேண்டும் என்றும், இல்லை கண்டிப்பை விட சுதந்திரமாக வளர்ப்பதே சரியானது என்றும் இருவேறு கருத்துக்கள் நம்மிடம் உண்டு. உண்மையில் எது சரியான வழி?

குழந்தைகளின் குறைகளைச் சுட்டிக்காட்டும் முன்னர் அவர்கள் செய்கிற நல்ல விடயங்களை முதலில் பாராட்டும் பழக்கத்தைப் பின்பற்ற வேண்டும். மனதாரப் பாராட்டுவதன் மூலம் குழந்தைகளுடைய மனநிலை மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் இருக்கும். அப்படி மகிழ்ச்சியாக இருந்தால் தான் பெற்றோர் சொல்வதை காதுகொடுத்து கேட்டு, உள்வாங்கிக் கொள்ளும் மன நிலைக்கு வருவார்கள். அதேபோன்ற மகிழ்ச்சியான சூழலில் அவர்களுடைய தவறுகளைப் புரியும்படி அன்போடு எடுத்துச் சொல்ல வேண்டும்.

பிள்ளைகள் கோபத்துடன் நடந்து கொள்ளும் சமயங்களில் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். அவர்களிடத்தில் போதுமான மனப்பக்குவமோ, அனுபவ அறிவோ, உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் சுபாவமோ இருக்காது.

அவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப அவர்களை வழி நடத்திச் செல்ல வேண்டும். பெற்றோர் பெருமைப்படும் அளவுக்கு பிள்ளையிடம் நிச்சயமாக சில நல்ல விடயங்கள் இருக்கும். அவைகளை கண்டறிந்து பாராட்ட வேண்டும். மற்றவர்களிடம் பேசும்போது பிள்ளைகளிடம் வெளிப்படும் நல்ல விடயங்களை சுட்டிக்காட்டி பேச வேண்டும். ஒரு போதும் பிள்ளைகளின் சுயமரியாதையைப் பாதிக்கும் வகையில் பேசுவதோ, மட்டம் தட்டிக் கதைப்பதோ திட்டுவதோ கூடாது. இது அவர்களில் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி தன்னம்பிக்கையை சிதைத்து விடும். நம் குழந்தைகள் தலைசிறந்தவர்களாக திகழ வேண்டுமென்று விரும்பினால் முதலில் நாம் முன் மாதிரியாக வாழ வேண்டும். ஏனெனில் நாம் கூறுகின்ற சொற்கள் காற்றில் கரைந்து போய்விடும். நற்செயல்கள் மாத்திரமே மனதில் பதியும். செயல்களை மாத்திரமே நமது பிள்ளைகளின் மூளையில் பதிந்து வைத்திருப்பார்கள். நிதானமாக சிந்தித்து செயற்படும் பழக்கத்தை குழந்தை பருவத்திலேயே தாங்கள் பிள்ளைகளிடம் உருவாக்குவது பெற்றோரின் பொறுப்பு சிறு வயதில் இருந்தே அவர்களின் சிந்தனை திறனை கூர்தீட்டி மெருகேற்ற வேண்டும். நெருக்கடியான சூழ்நிலைகளிலும் நிதானமாக சிந்தித்து செயற்படுகின்ற ஆற்றல் படைத்தவர்கள் எல்லா சிக்கல்களையும் எளிதாக தகர்த்துதெறிந்து வாழ்க்கையில் முன்னேறுவார்கள்.

தற்காலத்தில் சினிமா நட்சத்திரங்கள், கிரிகெட் வீரர்களை பார்த்து அவர்களது நடை, உடை, பாவனைகளை பின்பற்ற முனைகின்றனர். ஆனால் தமது பெற்றோர்களை பின்பற்ற மறுக்கின்றனர். தனக்காக கஷ்டப்பட்டு உழைக்கும் பெற்றோர்களின் நிலையை மறந்து கிரிக்கெட் வீரர்களுக்காக, சினிமா நட்சத்திரங்களுக்காக தற்கொலை செய்யுமளவிற்கு அவர்கள் மீது பற்றுக் கொண்டுள்ளனர். இந்த நிலைகளை ஆரம்பம் முதலே கண்டு கொண்டு அவர்களை வழி நடத்த வேண்டும். அப்போதுதான் சிறந்ததொரு எதிர்காலத்தை பெரியவர்களாகிய எம்மால் சிறுவர்களுக்கு கொடுக்க முடியும்.

நாம் சிறந்த முறையில் நடந்து கொண்டால் நம் குழந்தைகளும் அப்படியே இருப்பார்கள் நாம் செபித்தால் நம் பிள்ளைகளும் செபிப்பார்கள். நாம் பாடசாலைப் பக்கம் தலைகாட்டுவதே இல்லையென்றால் நம் பிள்ளைகளும் படுக்கையை விட்டு சூரியன் உதிக்கும் வரை எழுந்திருக்கவே மாட்டார்கள். பிள்ளைகளுக்கு நிறைய பொருட்கள் வாங்கி கொடுப்பதை விட நல்லொழுக்கம் கற்றுக் கொடுப்பதே சிறந்தது. ஏனெனில் நல்லொழுக்கம் பயின்ற பிள்ளைகளினால் இந்த சமூகமே நன்மையடையும். "அன்பின் மகிழ்ச்சி" என்னும் சுற்றுமடலில் பாப்பரசர் பிரான்சிஸ் எமது பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தை கற்றுக் கொடுக்க வேண்டும் என்று பெற்றோர், ஆசிரியர்கள், குருக்களை அழைத்து நிற்கின்றார்.

**அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)**

# காவலன் கலசம்

## காவலன் கண்மணிகள்



**அன்பின் காவலன் கண்மணிகளே!**

**உழைப்பில்லாமல் உயர்வில்லை**

"நாங்கள் உங்களுக்கு கட்டளையிட்டது போல உங்கள் சொந்தக் கையால் உழைத்து அமைதியாய் வாழ்வதில் நோக்கமாயிருங்கள்" (1 தெச 4:11)

வியர்வை இன்றி உயர்வில்லை. உழைக்காதவர்கள் எதற்கும் பிறரையே சார்ந்திருக்க வேண்டியிருக்கின்றது. வாழ்வு பயனுள்ளதாக ஆக்கப்படுவது உழைப்பின் மூலமே. ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களுடன் வீதி வழியே போய்க் கொண்டிருந்தார். பெருமழை காரணமாக அந்த மண் வீதி முழுவதும் சேறும் சகதியுமாக இருந்தது. சற்றுத் தொலைவிலே ஒரு வண்டி சேற்றிலே சிக்கிக் கொண்டது வண்டிக்காரன் அதன் ஓரத்திலே உட்கார்ந்து கொண்டு அவ்வீதியால் சென்று வருபவர்களை உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனுக்கு உதவுவதற்கு மாணவர்கள் சற்று முன்னேறி வந்தனர். கூடவே தயக்கத்துடன்ஆசிரியரையும்பார்த்தனர். ஆனால்ஆசிரியர்வண்டிக்காரனை புறக்கணிப்பது போல அவனைக் கவனியாது சென்றார். மாணவர்களும் திகைப்போடு ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு ஆசிரியர் பின்னே சென்றனர்.

சிறிது தூரம் சென்ற பின்னர் இன்னொரு வண்டியும் சேற்றிலே புதைந்திருந்தது ஆனால் வண்டிக்காரன் தனது வண்டியை அதிலிருந்து மீட்பதற்காகப் போராடிக்கொண்டிருந்தான். முயற்சி எடுத்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த அசிரியர் அவனை நோக்கி ஓடிப்போனார். கூடவே மாணவர்களும் பின் தொடர்ந்தனர். ஆசிரியரும் மாணவர்களும் வண்டிக்காரனுக்கு கை கொடுக்க வண்டியானது எளிதாகவே மீட்கப்பட்டது. வண்டிக்காரன் நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

மாணவர்கள் ஆசிரியரிடம் ஏன் குருவே இந்த பாரபட்சம். முதல் வண்டிக்காரனை ஏறெடுத்தும் பார்க்காத நீங்கள் அடுத்த வண்டிக்காரனுக்கு ஓடிப்போய் உதவினீர்களே! ஏன் என வினவினர்.

ஆசிரியரோ மாணவர்களைப் பார்த்து முதல் வண்டிக்காரனோ சுய முயற்சி இல்லாமல் பிறர் உதவியால் வாழ நினைப்பவன். சொந்த உழைப்பினை அலட்சியம் செய்தவன். அடுத்த வண்டிக்காரனோ தனது பிரச்சினையைத் தானே தீர்க்க முயற்சி செய்தவன். தன் உழைப்பினை மூலதனமாக செலுத்துபவன். இவனே கவனிக்கப்பட வேண்டியவன் . "உயர்வுக்கு முதற்படி முயற்சி" என மாணவர்கள் புரிந்து கொண்டனர்.

வெற்றிக்கு திறவுகோல் கடின உழைப்பைத் தவிர வேறு இரகசியம் இல்லை. வெற்றியின் உச்சிக்கு ஏற ஏணியாய் இருப்பது உழைப்பே. அந்த ஏணியின் முதற்படி முயற்சி. முயற்சி செய்யும் போதுதான் நமது திறமை என்ன என்பதை நாம் உணர முடியும்.

முயற்சியின்றி இருப்பவனே சோம்பேறியாக கருதப்படுவான். உழைத்து முன்னேறிய தலைவர்களுள் ஒருவர் தான் மறைந்த திரு அப்துல்கலாம். அவர்கள் எளிய நிலையிலிருந்து மிக உயர்ந்த நிலைக்கு வந்தவர். "முன்னேறுவதற்காக கனவு காண்" என்ற கருத்தினை இளையோரிடம் விதைத்தவர். விதைக்காத இடத்தில் அறுவடை செய்ய முடியாது! தூவாத இடத்தில் சேகரிக்க முடியாது!

*ஆன்றிசா றிச்சட்வேக்மன்*
(A/L/ 2019)
*யா/ கொழும்புத்துறை இந்து ம.வி*

## சிந்திக்க ஓர் சித்திரம்



## கால்களில் விழுந்து




போர் முடிவுக்கு வந்த பின்னான காலத்திலிருந்து எமது பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர் மற்றும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் கால்களில் விழுந்து வணங்கும் நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சில வேளைகளில் கட்டாயப்படுத்தப்பட்டும் வருகிறது. இது அவசியமான ஒரு நடைமுறைதானா என சிந்தித்துப் பார்ப்பது நல்லது. எமது அயல் இனமாகிய சிங்கள மக்களின் பண்பாட்டில் இது நீண்ட காலமாக இருந்து வருவது உண்மை. மதத்தலைவர்களையும், பெற்றோர் பெரியோரையும் கால்களில் விழுந்து வணங்கும் பழக்கத்தை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பண்பாட்டு வெளிப்பாடாகிய இதனை மதிக்கும் அதேவேளை ஈழத்தமிழர்களாகிய எம் மத்தியில் இம்முறை நடைமுறையில் இருக்கவில்லை என்பதனையும் நாம் ஏற்க வேண்டும்.

இருகரம் குவித்து வணங்குவதே எமது பண்பாடாகக் காணப்பட்டது. இறைவனை தொழும் போது இரண்டு கரங்களையும் தலைமேல் குவித்தும் தம்மைவிடப் பெரியவரை வணங்கும் போது தமது முகத்தின் முன்பாக இரண்டு கரம் குவித்தும், தமக்கு சமமானவரை வணங்கும் போது நெஞ்சுக்கு நேராக இரு கரங்களையும் குவித்தும் அன்போடு வணங்குவதும் வரவேற்பதும் எமது பண்பாகும். ஐரோப்பிய முறையில் கைலாகு கொடுப்பதையும் கால்களில் விழலையும் தவிர்த்து எமக்குரிய பழக்கத்தில் நிலைத்திருப்பதே நல்லதென தோன்றுகிறது.

அதேவேளை வித்தை கற்றுத்தரும் குருவுக்கும், பெற்று வளர்த்த பெற்றோருக்கும் பாத சேவை செய்யும் பண்பு பழந்தமிழர் மத்தியில் காணப்பட்டது என்கின்ற கருத்தும் சீர்தூக்கற்பாலதே. ஆயினும் ஒரு அடிமை மனப்பாங்கை வளர்க்கக் கூடிய பாதம் தொட்டு வணங்கும் பழக்கத்தை குறைந்தபட்சம் வலிந்து எம்மத்தியில் அறிமுகப்படுத்தாமல் விடுவதே நல்லது என்பது என்னுடைய கருத்து. குறிப்பாக அரசியல் வாதிகளின் கால்களில் எமது மாணவச் செல்வங்கள் விழுவது மிகவும் அபத்தமான காட்சியாகவே மனதுக்குப்படுகிறது. தமிழ்நாட்டில் "அம்மா" என்று சொல்லி முதலமைச்சரின் பாதங்களில் அமைச்சர்கள் தொடக்கம் விழுந்து எழும்புவதை ஒரு வகை அசூசையோடு கிண்டல் செய்தவர்கள் நாங்கள் என்பதும் நினைவுக்கு வருகிறது.

உரியவர்களுடைய கருத்துக்கு இது சமர்ப்பணம்

மாற்றுக் கருத்துக்களோடு கூடிய ஆரோக்கியமான கருத்துப் பகிர்வுக்கும் சாமக்காவலன் தயாராக இருக்கின்றான்... பகிருங்கள்...

**அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்**

## விசுவாசத்தின் வித்து

## இயேசுவின் உயிர்ப்பு

நியதி என்பது தன்னகத்துள்ளே பல யதார்த்தனைக் கொண்டு இருக்கின்றது. அதாவது பிறப்பு என்றாலே இறப்பும் மறுக்க முடியாத ஒன்று தான். உலகில் அனைத்தும் காலம், இடம் எனும் நியதிக்குள் உள்வாங்கப்பட்டே இருக்கின்றது. இதுவே உண்மை.

இதை யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது. இயேசுவும் தன்னை அதற்குள் உட்படுத்தினார். தானாகவே தன் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற இவ்வாறு செய்தார் என்பதற்கு அவரது உயிர்ப்பே சாட்சி. ஏனெனில், தன் உயிர்ப்பின் மூலம் காலத்தையும், இடத்தையும் வென்று உலகின் நியதியை மாற்றிக்காட்டினார். இதுவே இவர் மாறுபட்டவர், நிறைவுள்ளவர், அற்புதமானவர், வரையறுக்க முடியாதவர் என்பதற்கு சான்றாகும்.

தலைவர்கள் கொள்கைகளின் அடிப்படையிலும், வாரிசுகளின் வரிசையிலும் தோன்றுகின்றார்கள். ஆனால் அவர்கள் மனிதத் தன்மையில் பலவீனமானவர்கள் என்பது உண்மை. உலகின் தலைவர்கள் வரிசையில் கிறிஸ்து மாறுபட்டவர். ஏனெனில், அவரது வாழ்வு, செயல்கள் அவர் தலைவன் என்பதைக் காட்ட மறுக்கின்றது. காரணம் அவர் மனிதருக்காகவே வாழ்ந்தார். ஆனால் யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு தாம் நினைத்தது நிறைவேறி விட்டது. இவர் இறைமகன் இல்லை என மார்பு தட்டினார்கள். ஆனால் அவரின் இறப்பின் நிகழ்ச்சிகளும் உயிர்ப்பின் நிகழ்ச்சிகளும் அனைத்தையும் உடைத்து சீடர்களின் விசுவாசத்தை வலுப்பெறச் செய்தது.

ஒருமுறை பவுல் கூறுவார் "இயேசு உயிர்த்தெழவில்லை என்றால் நாம் கொண்டிருக்கும் விசுவாசம் செத்தது." மனிதன் பிறக்கிறான், வாழ்கிறான், இறக்கிறான். அவனுடைய இறப்பு காலங்களுக்குள் மறைந்து விடுகின்றது. ஆனால், இயேசு பிறந்தார், வாழ்ந்தார், இறந்தார், வாழ்கின்றார். ஏனெனில் வாழ்வின் யதார்த்தத்தை, நியதியை மாற்றியமைத்தது இயேசுவின் உயிர்ப்பு. அவர் காலங்களுக்குள் உட்படவில்லை, உயிர்ப்பினால் வாழ்கின்றார்.

இயேசு காலங்களை, இடர்களை வென்றார் என்பதற்கு அவரின் உயிர்ப்பின் நிகழ்ச்சிகளே அத்திவாரமாக இருக்கின்றது. இயேசு சீடர்களுக்கு பூட்டப்பட்ட அறையினுள் தோன்றினார். இது இயேசு இவ்வுலகத்தை வென்றார் என்பதற்கு சாட்சியாகும். ஏனெனில், இறந்தவர் அறையினுள் என்ன ஆவியா? பேயா? ஆனால் இயேசு தோமாவை நோக்கிக் கூறுவார் "உன் கையை என் விலாவில் இடு". ஆனால் இங்கே தான் இயேசு அனைத்திலும் மாறுபட்டு உடலுடன் இருந்தார் என்பதையும் காட்டுகின்றது. இந்த உயிர்ப்பின் பின்னைய நிகழ்வுகள் இயேசு தனித்துவமானவர் இறைமகன் என அனைவருக்கும் காட்டி நிற்கின்றது.

இயேசுவின் பல புதுமைகளைப் பார்த்த அவரோடு வாழ்ந்த சீடர்கள், இயேசுவின் இறப்பின் போது கதிகலங்கினார்கள். அவர்கள் கொண்ட விசுவாசம் இயேசுவின் மேல் கொண்ட பற்று அனைத்தும் கேள்விக்குரியது. முடங்கிப் போனார்கள், பயந்து போனார்கள். ஆனால் இயேசு உயிர்த்து அவர்களுக்கு தோன்றும் போது தான் புதிய படைப்பாக மாறினார்கள்.

எனவே, இந்த உயிர்ப்பு என்பது ஒரு சாதாரண நிகழ்வுமல்ல, வரலாற்றில் சொல்லப்பட வேண்டிய நிகழ்வுமல்ல. மாறாக கிறிஸ்தவர்களாகிய எம் வாழ்வில் வாழப்பட வேண்டிய நிகழ்வு. இயேசு உயிர்த்தார், வாழ்கின்றார் என்பதை நாம் எம் செயல்களால் பிறருக்கு காட்ட அழைக்கப்படுகின்றோம். இயேசுவின் வாழ்விற்குப் பரிசு உயிர்ப்பு. இதுவே எமக்குப் படிப்பினை.

**அருட்சகோ. ம. றாபின்**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**

## காவலன் கலசம்

# இனி நான் இறக்கத் தயார்





மதிலுக்கு அந்தப் பக்கம் தரையில் ஒரு ரோஜாப் புதர் இருந்தது. அந்த ரோஜாக்களின் அழகு. மதில் மேலிருந்த காட்டு மலர்களை ஒளிமங்கச் செய்தது. அதனால், அவை அவமானப்பட்டன. ஒரு நாள் காலை அவை கடவுளிடம் "அடையாளமற்ற மலர்களாக இருப்பதிலிருந்து மாற்றி, எம்மை ரோஜா மலர்களாக மாற்றிவிடுங்கள்" என்று வேண்டிக் கொண்டன.

"ஏன் வீணாகச் சிரமப்படுகிறீர்கள்? ரோஜாவின் வாழ்க்கை சிரமமானது. புயலடித்தால் வேரோடு ஆடும். மலர்ந்தால் அதைக் பறிக்க ஆட்கள் வருவார்கள். நீங்கள் இப்போது பாதுகாப்பான நிலையில் தானே இருக்கிறீர்கள்? இதை ஏன் இழக்க வேண்டும்"? என்று கடவுள் கேட்டார்.

ஆனால் காட்டு மலர்கள் வற்புறுத்தின. "நாங்கள் நீண்ட காலமாகப் பாதுகாப்பாக வாழ்ந்து விட்டோம். இப்போது நாங்கள் ஆபத்தான சூழலில் வாழ விரும்புகிறோம். இருபத்து நான்கு மணி நேரத்திற்காவது எங்களை ரோஜாக்களாக மாற்றுங்கள்" என்று அவை வேண்டின.

அவற்றிற்குப் பக்கத்திலிருந்த வேறு காட்டு மலர்கள்."முட்டாள்தனமாகப் பேச வேண்டாம். இந்த முட்டாள்தனமான ஆசையால், எங்கள் முன்னோர்கள் மிகவும் துன்பப்பட்டிருக்கிறார்கள். நமது இனத்தின் அனுபவம் என்னவென்றால் நாம் சரியாகவே பிறந்திருக்கிறோம் என்பதுதான். ரோஜாவாக நாம் முயலக்கூடாது" என்று கூறின.

ஆனால் மதில் செடி மீண்டும் வற்புறுத்தியது. "நான் விண்மீன்களுடன் அரட்டையடிக்க விரும்புகிறேன். புயல்களோடு போராட விரும்புகிறேன். மழையில் நீராட விரும்புகிறேன். நான் ரோஜாவாக மாறியே தீர்வது என்று முடிவெடுத்துவிட்டேன்" என்று கூறியது.

கடைசியில் கடவுள் சம்மதித்துவிட்டார். ஒரு நாள் மாலை மதில் மேல் பூத்திருந்த கொத்து மலர்கள் ரோஜாக்களாய் மாறிவிட்டன. உடனே சோதனைகளும், சிக்கல்களும் ஆரம்பமாகிவிட்டன. புயல் வந்து அதன் வேர்களையே அசைத்தது. மழை அடித்தது. அதை அடியோடு பெயர்த்துக் கீழே தள்ளிவிட்டது. நண்பகல் வெயில், அதன் இதழ்களைக் காயவைத்து விட்டது. அவை எல்லையற்ற துன்பத்தை அனுபவித்தன.

எல்லாத் திசைகளிலிருந்தும் ஆபத்துக்கள் வந்தன. புதிதாய் மலர்ந்திருந்த ஒரு ரோஜா மொட்டிடம் காட்டு மலர்கள் வந்துகூடி " நாங்கள் சொல்லவில்லையா? நீங்கள் கேட்கவே இல்லை. முன்பு எவ்வளவு பாதுகாப்பாக இருந்தீர்கள்? சில பிரச்சனைகள் அப்போது இருந்தன என்றாலும், அவை உமக்குப் பழக்கப்பட்டவை. நம்மால் சமாளிக்கக்கூடியவை. இப்போது எவ்வளவு சிக்கலில் மாட்டிக் கொண்டீர்கள்" என்று கூறின.

புதிய இளம் ரோஜா அதற்குப் பதில் சொன்னது "நீங்கள் மடையர்கள் பாதுகாப்பான சூழலில் மதில் மேல் காலம் பூராவும் உப்புச் சப்பில்லாமல் வாழ்வதைக் காட்டிலும், இருபத்து நான்கு மணிநேரமும் ஆபத்தான சூழலில் ரோஜாவாய் வாழ்வது மேலானது என்று நான் சொல்கிறேன்.

நான் கதிரவனோடு உறவாடினேன், விண்மீன்களுடன் பேசினேன். என் ஆன்மாவை நான் பெற்றேன். பூரண மன நிறைவடைந்தேன். நான் முழுதாக வாழ்ந்து விட்டேன். இப்போது முழுதாக இறக்கப் போகிறேன். ஆனால் உங்கள் வாழ்வு வாழும் மரணம் மட்டுமே" என்று கூறியது.

## எங்கட பாதர்



எங்கட பாதர் பங்குக்கு வந்து கொஞ்சக் காலம் தான். அழகாக சிரிப்பாரு. அழகாக பேசுவாரு. யாருடைய மனதையும் அதிகமாக நோகச்செய்ய மாட்டாரு. அவரோடு நான் கதைத்தால் என்ன என்று நினைத்தன். ஒரு நாள் மாலையில் 5.00மணியளவில் பாதர் தன்னுடைய அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். கொஞ்சம் பயந்து பயந்து போய் "குட் ஈவினிங் பாதர்" என்றேன். அவரும் "குட் ஈவினிங்" வாங்க தம்பி உட்காருங்க" என்றார். எனக்கு அவர் மதிப்புக் கொடுப்பதை கண்டு உற்சாகம் அடைந்தேன்.

பாதரோடு நிறைய பேசினேன். மிக இயல்பாக ஒரு நதியைப்போல அழகாக நகர்ந்தது அந்த உரையாடற் கணங்கள். இவரும் மனிதன்தானே "பாதர் நீங்கள் ஏன் பாதரா வந்தீங்கள்?" எனது கேள்விக்குப் பின்னால் பல காரணங்கள் இருந்தன. கடலுக்குள் புதைந்திருக்கும் இரகசியங்களை எடுப்பது போல, தனது நேற்றுக்களில் நீச்சலடித்து அழகான தனது அழைத்தல் கதைகளைச் சொன்னார். வீடு வந்துவிட்டேன்.

கொஞ்சக் காலமாக எனது மனதில் ஒரு கேள்வி. இந்தச் சுவாமிமார் எப்படி தனியாக வாழ்கிறார்கள்?அவர்களுக்கென்று ஒரு குடும்பம் இல்லையே? அவர்கள் எப்படி சாதாரண மனிதர்களைப் போல திருமணம் முடிக்காமல் இருக்க முடியும்? பங்கிலிருக்கும் எல்லா மக்களையும் தனது மக்களாக எப்படி நினைக்க முடியும்?

பாதருக்கு வயதானால் யார் அவர்களைப் பார்ப்பாங்க? ஏன் தான் இந்த கேள்வியெல்லாம் என்னுடைய தலைக்கு வருகிறதாக தெரியாது.

பல வேளைகளில் இவர்களின் வாழ்வின் வலிகளும் இரகசியங்களும் எம் சின்ன மூளைக்குச் சிக்குவதே இல்லை.

உங்கள் குரு நண்பர்களுக்காக செபியுங்கள் அவர்கள் இப்போது மிக முதிர்ந்த வயதில் வயோதிபர் இல்லங்களிலோ. ஓய்வெடுக்கும் இல்லங்களிலோ இருந்தால் ஒரு நாள் ஒதுக்கி அவர்களை சென்று பாருங்கள். அவர்கள் கட்டாயமாக ஆனந்தக் கண்ணீர் சிந்துவார்கள்.

எமக்குப் பிடித்த குருக்கள் இருக்கலாம், பிடிக்காத குருக்கள் இருக்கலாம் அவர்கள் அனைவருக்காகவும் செபிப்போம், சில குருக்களை எமக்குப் பிடிக்கும் சில சமயம் அதற்குக் காரணமே தெரியாது. சில குருக்களை எமக்குப் பிடிக்காது. அதற்கும் காரணமே தெரியாது. எப்படியோ குருக்கள் அபிஷேகம் செய்யப்பட்டவர்கள். ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்கள் அவர்களை நாம் மதிக்கவேண்டியது எமது கடமை.

பல நாடுகளில் குருமடங்கள் மூடப்படுகின்றன. குருக்கள் இல்லாமல் கோயில்கள் மூடப்படுகின்றன.

மரங்கள் மனுசனைப் பார்த்து இப்படிக் கேட்டதாக எங்கோ படிச்சேன் **"நாங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக எத்தனை லட்சம் சிலுவைகளைத் தந்திருக்கிறோம் ஆனால், மனிதர்களே உங்களால் ஏன் ஒரு இயேசு கிறிஸ்து வைக்கூடத் தரமுடியவில்லை"?**

தேடல், தொகுப்பு :
திருத்தொண்டர். சி.அஜந்தன்

# பேதுருவின் கண்ணீரும் யூதாஸின் கயிறும்.....

பேதுரு கடவுளை கண்ணீரால் கரைத்தான். யூதாஸ். கடவுள் அழுத கண்ணீர்களுக்கும் காரணமானான். இருவரும் இயேசுவோடு பக்கத்தில் நடந்துபோன சீடர்கள் தானே. உங்களை நண்பர்கள் என்றேன் என்று இயேசு கூறியது இவர்களையும் இணைத்துத்தானே. அப்படியிருக்க, எப்படி பேதுரு வரலாறாகிப் போனார். யூதாஸ் வரலாற்றுத் தவறாகினான். எங்கு பிழை நடந்தது?

பேதுரு திருச்சபையின் பாறை. யூதாஸ் திருச்சபையின் தீராத வடு. இத்தனை ஒற்றுமைகள் இருந்தும் இருவருக்கும் இடையே ஏன் இந்த வித்தியாசம்? இருவருமே மனநதிரும்பினர் என்றாலும் நற்செய்திகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை நாம்



கவனத்தில் கொள்ள வேண்டும். "பேதுரு மனம் நொந்தார்" (மத்.26:75) யூதாஸ் மனம் வருந்தினான் (மத். 27:3).

வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே உள்ள தூரம் நூலிழைதான். பேதுரு தனது பாவத்தை எண்ணி மனம் நொந்தார். இயேசுவின் மன்னிப்பை நாடினார். இயேசுவின் துணையோடு மீண்டுமாக தனது பாவத்தைச் சரி செய்ய முயன்றார். ஆனால் யூதாஸின் மன வருத்தம் தன்னையே தீர்ப்பிட்டதே தவிர. தீர்ப்பிடாத இயேசுவின் கருணையை நாடவில்லை. இறைவனின் கருணையை நோக்கித் திரும்பாத மன வருத்தம் தன்னையே தீர்ப்பிட்டுத் தண்டித்துச் சீரழித்துவிடும்.

யூதாஸைப் போன்ற இறைவனை நாடாத மனங்களில் மன வருத்தம் இருக்குமே தவிர மனமாற்றம் இருக்காது. ஏனெனில், மேற்சொன்னவற்றில் முதலாவது மனசாட்சியின் தீர்ப்பு. இரண்டாவது இறைவனின் கொடை.

ஒவ்வொரு பாவத்திற்குப் பிறகும் நம்முன் இருக்கும் இரு தெரிவுகள் : பேதுருவின் கண்ணீரும் யூதாஸின் விரக்தியும்.

வாழ்வையும் சாவையும் ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உனது வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துகொள். (இ.ச.30:19).

# கடைசியாய் ஒருமுறை



ஒக்ரோபர் மாதம் 23ம் திகதி என்னுடைய வீட்டுக்கு என் தந்தை வந்தார். அவருக்கு வயது 86. மனைவியை இழந்த அவர் அவருடைய பிள்ளைகளின் வீடுகளில் சுழற்சி முறையில் வசித்தபடி வாழ்ந்து வந்தார். அப்போது என் அண்ணன் வீட்டில் இருந்து வந்தவர், ஒருநாள் மைலாப்பூர் கோவிலுக்கு வந்தார். திரும்ப நேரமான தால் அருகிலிருந்த என் வீட்டில் தங்க வந்தார்.

"வாங்கப்பா" என்று சொல்லி விட்டு அவசரமாக என் எழுத்து வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டேன். சற்று நேரம் கழித்து. சாப்பாட்டு மேசையில் அவருடன் சேர்ந்து சாப்பிட்டேன். அவருடன் அதிகம் பேசவில்லை. விறுவிறுவென்று சாப்பிட்ட கையோடு அவசர அவசரமாக மீண்டும் எழுதச் சென்று விட்டேன். சிறிது நேரம் கழித்து வந்து பார்த்தால் அப்பா தூக்கத்தில் இருந்தார். அடுத்த நாள் காலை அப்பா அண்ணன் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.


25ம் திகதி பௌர்ணமி தினம் இரவு, செய்தி வருகிறது. என் தந்தை இறந்து விட்டார். தூக்கத்தில் மரணம்.

ஆனால் அன்று முதல் எனக்குத் தூக்கம் பறிபோனது. அடடா... இரண்டு நாட்கள் முன்பு வீட்டுக்கு வந்தாரே... எவ்வளவோ பேசியிருக்கலாமே! நன்கு விசாரித்திருக்கலாமே... எழுத்து என்ன பெரிய எழுத்துஒரு நாள் எழுதாவிட்டால் என்ன? அடடா... இனி அவர் வருவாரா? அவருடன் பேச முடியுமா? எண்ணி எண்ணிப் புலம்பினேன்.

குமுதத்தில் அப்போது வெளி வந்து கொண்டிருந்த கேள்வி. பதில் பகுதியில் என்னுடைய ஏக்கத்துக்கான விடையைச் சொல்லியிருந்தார் வைரமுத்து.

ஒரு பெற்றோர் தம் மகளைக் கண்டிக்கிறார்கள். மேலும் தண்டனை கொடுக்கும் விதமாக அவளோடு பேசாமல் இருக்கிறார்கள். எதிர்பாராத விதமாக. அந்த மகள் ஒரு சாலை விபத்தில் இறந்து விடுகிறாள். "கடைசியில் பேசாமல் விட்டு விட்டோமே. என் மகள் தவிப்புடன் இறந்திருப்பாளே" என்று பெற்றோர் கதறியிருக்கிறார்கள்.

அதனால், "எல்லோருடனும் முதன் முறையாக சந்திக்கிறபோது காட்டுகிற மரியாதையுடனும். கடைசி முறையாகப் பார்ப்பது போன்ற அன்புடனும் பழகுங்கள்" என்று முடிந்திருந்தது பதில்.



# இகழப்பட்ட இளந்தளிர்

இறைதிட்டம் நிறைவேற்றும் மைந்தனாய்
இறைமகனும் ஏற்றிட்டார் மனுவுருதனை
நிறைவாழ்வை மனுக்குலம் பெற்றிடவே - பாஸ்கா
மறைபொருள் செம்மறியுமானதே - இவ் - இளந்தளிர்

இறைவாக்கினர் எசாயாவின் மொழியில் மிளிரும்
இறை ஊழியனானீர் மனித இனம் தளைக்க
ஆட்சிப் பொறுப்பினை தோள்மீது சுமந்தே
மாட்சிமிகு ஆலோசகராகி அவனியில் உழைத்தீர்

மனம் மாறிநற்செய்தியை நம்புங்கள் என்றே
தினம் தினம் முழக்கமிட்டீர் கலிலேயாதனில்
ஆண்டவரின் வழியை அகிலம் கண்டிடவே
குன்றுகள் மலைகள் தாழ்த்தி சமத்துவம் போதித்தீர்

மக்களினங்களுக்கு நீதிவழங்க தெருவில் - அன்று
எக்காளம் இடும் குரலை நீர் உயர்த்தவில்லை
எளிய உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்கும் இனிய உறவானீர்
இருளில் இருப்போருக்கு வாழ்வில் ஒளிரும் திரியானீர்

நலிந்தஉள்ளத்தினரை திடப்படுத்தும் தலைவனானீர்
நொறுங்கிய நெஞ்சத்தினரை ஊக்குவிக்கும் தலைவனானீர்
சிறைப்பட்டோரின் தளையறுக்கும் நற்காவலனானீர்
குறைகுற்றம் நோக்கியோர்க்குக் கடும் சாட்டையுமானீர்

இணையற்ற பணிபுரிந்த இளந்தளிர் இகழப்பட்டார்
துணையற்ற செம்மறியாய் கொல்வதற்கு இழுக்கப்பட்டார்
விரும்பத்தக்க இளம் தோற்றத்தை இழந்தவரானார்
அருவருத்து முகத்தை மறைக்கும் இழிநிலைக்கும் ஆளானார்

ஒடுக்கப்பட்டுச் சிறைபுகுந்து அடிபட்டபோதும்
மிடுக்கோடு வாய்திறந்து ஓர் வார்த்தை பேசவில்லை
சிறுமைப்படுத்தப்பட்டு நொறுக்கப்பட்டபோதும்
பொறுமையுடன் நம் குற்றங்களைச் சுமந்த இளைஞனானார்

சிந்திப்பீர் இளைய தலைமுறையே நீரும் இன்றே
நிந்தனைஏற்றுக் கல்வாரிச் சிகரம் ஏறியவேளையிலும்
சிந்தனையில் வஞ்சனையின்றி மன்னிப்பளித்தே
தந்தையின் சித்தம் எய்திய இயேசுவும் ஓர் வீர இளைஞனே!

இறைதிருவுளம் சிறப்புற தம்மையே பலியாக்கிய
இளந்தளிர் இயேசுவின் தியாகம் எம் இளையோர்க்கும்
இகழ்வினை வென்று மாண்பினை வளர்க்கும்
இறைதிட்டப் பயணத்தில் ஊற்றாகட்டும்
இறைமகன் உயிர்ப்பே உறுதுணையாகட்டும்!

எஸ்.எம்.வுளோறன்ஸ்
(இளவாலை)

# கைவிடப்பட்ட தவக்காலம்

பாவ குப்பைகளை கொழுத்தாமல்
திறக்கப்பட்டிருக்கிறது மனமாற்ற வீதி

வாட்டம் சோர்வுமாக இருக்கிற
முகமூடிபோட்ட விரதம்
மாமிசம் தவிர்த்த மனசு
நெற்கடையில் சாப்பிடுகிறது மனித சாமிசம்

பாடுகளின் காட்சிக்கு
சனல் மாற்றுகிறது
யாரும் வந்தால்
சினிமா பார்த்த கண்

மது கஞ்சா திருட்டு விபச்சாரக்காரர்கள்
சீன் போட்டிருக்கிறார்கள்
தலை மட்டும் தெரிய விட்டு

திரையில் சிலுவைப்பாதை
பாவசங்கீத்தனம் செபமாலை
திருப்பலியில் பங்குபற்றும் சாட்சி

காலியாகத்தான் இருக்கிறது
தம்பதிகளின் மஞ்சம்
மனைவியோ கள்ளப்புருசனோடு தொடர்பு

பல வெள்ளை வேட்டிக் கள்ளரெல்லாம்
கன்னத்தில் வளர்த்திருக்கிறார்கள் தாடி

சூனியக்காரர்களின் வீட்டிலும்
முழங்குகிறது தவக்காலப் பாட்டு
சாத்தான் ஆடுகிறான்
சம்மனசுகளின் வேசம் போட்டு

எப்ப நாற்பது நாள் முடியும் என்று
குளம்புகிறது லீவெடுத்த பாவங்கள்
உயிர்ப்பு ஞாயிறு அன்று
இடம்பெயர்ந்த பாவங்களுக்கு
மீள் குடியேற்றம்

பாய்போல சுருட்டப்பட்டு ஒரு மூலையில்
எறியப்பட்டுக் கிடக்கிறது தவக்காலம்

மனம் திரும்பாத வாழ்க்கை எல்லாம்
கடவுளால் நெருக்கப்பட்டுத்தான் திருத்தப்படும்!

உயிரோவியன்
மன்னார்



# இயேசு பிரான் உயிர்த்து விட்டார்



விதையொன்று தனைக்கிழித்து
முளைவிட்டு எழுவது போல்
நடப்பட்ட கிளையொன்று
துளிர் விட்டு வளர்வது போல்
கல்லறை தனை உடைத்து
கிறிஸ்து பிரான் உயிர்த்துவிட்டார்

கசையால் தசை கிழிந்து
உமிழ்நீரால் முகம் நனைந்து
முள்முடியால் தலை உடைந்து
தோளிலே சிலுவை சுமந்து
கல்வாரியில் உயிர்க் கொடை தந்த
இயேசு பிரான் உயிர்த்து விட்டார்

நல்லவற்றை கயமை என்று
குற்றம் சுமத்திய யூதர்
கொடியவனை ஒழித்துவிட்டோம்
கல்லறைக்குள் புதைத்துவிட்டோம் - என
மார்புதனை நிமிர்த்தி
கொக்கரித்த வேளை
அனைவரும் வாயடைத்து
விழிபிதுங்கி நிற்க
இயேசுபிரான் உயிர்த்துவிட்டார்

இலாசருக்கு உயிர்கொடுத்து
சிறுமியை வாழ வைத்து
நயீம் நகர் இளைஞனை
கை தொட்டுத்தூக்கி விட்டு
ஆலயத்தை இடியுங்கள்
மூன்று நாளில் கட்டுவேன்
என்றுரைத்த வாக்கின்படி
இயேசுபிரான் உயிர்த்துவிட்டார்

பாவத்தின் அடிமைத்தனம்
எம்மைவிட்டு அகன்று போக
வானகத்தந்தை அருள்
எம்மை எல்லாம் நிறைவிக்க
நிலைவாழ்வு எனும் கொடையை
மகிழ்வோடு நாம் சுவைக்க
எனக்காக உனக்காக
இயேசுபிரான் உயிர்த்துவிட்டார்

இயேசுவோடு நாம் இணைந்து
நற்கனிகள் கொடுத்து நிற்க
அவர் தம் பண்புகளை
எம் வாழ்வில் கடைப்பிடிக்க
சீடத்துவ வழி நின்று
இறையாட்சி ஏற்படுத்த
எம்மோடு வாழுகின்ற
உயிர்த்த இயேசு அழைக்கின்றார்.

இ.அ.அமலர்டினா
யாழ்ப்பாணம்

# மரணம் எனும் சம்பவத்தில்...

ஒரு பக்கம் புலம்பல்
மறு பக்கம் அலம்பல் - இடையிடையே
சிறு பிள்ளைகளைப் போல சினுங்கல்
காணாத உறவுகள் கண்டு
மீளாத கனவுகள் கொண்டு - சோகத்தில்
உறவுகளைக் கட்டியணைத்து
கண்ணீர் எனும் தண்ணீர் ஊற்ற
சம்பிரதாயத்தில் கட்டுண்டு - அவற்றை
கவனமாக கையாளும்
மர்ம மனிதரைக்கண்டு
அன்பு கொண்டு அரவணைக்க
பண்பு கொண்டு உபசரிக்க - ஏங்கி நிற்கும்
அன்னாரின் உறவுகள்
வாழும் வரை கவனியாது
வாழ்ந்த பின் கவலை என்று - வாயுரை செய்யும்
வேதாந்தம் நிறைந்திருக்க
வெளியூர் உறவுகள்
வீடியோவில் பங்குகொள்ள - உள்ளூர் உறவுகள்
உபசரிப்பில் கலந்து கொள்ளும்
அடுப்பெரிய வீட்டினுள்
அயலவர் தரும் உணவை - அழுகையுடன்
விம்மலுடன் அரைகுறையாய் உண்டு.
எல்லோருக்கும் அதுதான்
எல்லாரும் இப்படித்தான் - கடைசியில் என்று
தத்துவம் பேசி
தடுமாறும் மனிதர்களை
வாழ்க்கை என்ற மேடையில்
நடித்தோய்ந்த கலைஞர் - ஓய்ந்திருந்து
இரசிக்கிறார் உண்மை இதுவே
மரணம் எனும் சம்பவத்தில்....

ஜெ.கிஷோக்
(உடுவில்)
(யாழ். இந்துக் கல்லூரி)

# புவிக்கு வந்த புது விடியல்

கறை படிந்த உலகில்
கவ்விக் கொண்டது காரிருள் - எங்கும்
கல்வாரி மரணங்களும்
கண்ணீர்த் துயரங்களும்
கடக்கும் இடங்களெல்லாம்
கல்லறைக் காடுகள்

குற்றங்கள் குறைவில்லாமல்
குவிந்து கிடக்கின்றது குப்பை போல
மனதில் அமைதி இல்லாமல்
பரிதவிக்கின்றோம் பேதைகள் போல

உறவுகளில் அன்பு இல்லை
உள்ளத்தில் நிறைவு இல்லை
உதட்டில் உண்மை இல்லை
நிரந்தரமான நீதி இல்லை

இதய அழுக்கினால்
வாழ்க்கை வழுக்குகின்றது
இனி ... இருளுக்குள் உறைந்து கிடப்பதா?
இல்லை.. இல்லை
மரணம் இனி இல்லை
வீழ்ச்சி இனி இல்லை
மகிழ்ச்சியே இனி எல்லை

இருள் படர்ந்த வானத்தில்
இருளினை கிழித்து
அழியா அருள் ஒளியாய்
புவி வந்தது புது விடியல் ஒன்று.

புண்பட்ட எம்மை
புண்ணிய வாழ்வில்
புனிதராய் வாழ
புது வழி காட்டும்
புதுமையின் ஒளி அது.

மரணமே இனி நீ இல்லை
மன்னவன் உயிர்த்துவிட்டார்
உண்மை என்றும் நிலைபெறவே
உன்னதர் உயிர்த்துவிட்டார்

புவி வாழ் மக்கள் மீட்புப் பெற
மீட்பர் உயிர்த்தெழுந்தார்
இருள் மறைந்து ஒளி பெறவே
புது விடியல் ஒன்று புவி வந்தது
கிழக்கு வானின் கதிரவனாய்

அருட்சகோ.ஜே.நிவான் யூலியஸ்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி





# உயிர்ப்பின் நாயகன்

கற்பாறைகள் வெடித்திட கல்லறை திறந்திட
காவியத் தலைவன் நாயகன் இயேசு உயிர்த்தனன் மண்ணில்
பூவுலகம் மகிழ்ந்திட விண்ணுலகம் களிகூர்ந்திட
அகமகிழ்வுடன் கொண்டாடிடும் ஞாயிறு உயிர்ப்பின் ஞாயிறு

துன்பச் சாவுதனை சிலுவையில் ஏற்று
கல்லறை கடந்த காவியம் எழுது
வள்ளலாம் இயேசு பிரான் உயிர்த்திட்ட இந்நாளில்
வேதனைகள் மறந்து கொண்டாடி மகிழ்ந்திடுவோம்

பாவிகளின் பாவச் சுமைதன்னை போக்க
பாரமான சிலுவை தன்னைச் சுமந்து
பார்வாழும் மக்களுக்காய் தன்னுயிர் தந்த
பார்போற்றும் நாயகனை போற்றிடுவோம்

விண்ணக தந்தையின் உத்தம மைந்தனை
மண்ணக மாந்தர்க்காய் உவப்புடன் உவந்தளித்து
தரணியில் வாழ் மக்களின் பாவம்தன்னை கழுவி
உயிர்ப்பித்த இந்நாளில் நாம் அக்களித்திடுவோம்.

மாற்றங்கள் நடந்திடும் பூவுலகு தன்னில்
மனமாற்றமடைந்த புதிய இளைஞர்களாக
உலகினை மாற்றிடும் உத்தமர்களாக வாழ்ந்து
உயிர்ப்பின் நாயகனின் செய்தியை எடுத்துரைப்போம்

அ.ஸ்ரோபான் ஜொக்சன்
யாழ்ப் பத்திரியார் கல்லூரி

# உயிர்ப்பின் ஞாயிறு

பழுதற்ற இரத்தத்தால் விளைந்து
இருள் குடித்த பாருக்கு
முழு - மதி பாச்சி - புது
ஒளி தந்த நாளே!
விண்ணக வேந்தன்
படுகுழி நின்ற மக்களைத் தேடி
மண்ணகம் வென்ற நாளே!
திக்கற்ற நிலையில் - நான்
திணறியபோது - புது
வழியான நாளே!
நான் கவலைகள் கடந்து
கரை வந்து சேர
மலைமேல் விளக்காகி
ஒளி தந்த நாளே!
உயிர்ப்பின் நாளே!

பயத்துள் புதைந்திட்ட சீடர்கள் எழுந்தார்கள்
அஞ்சி ஒழித்தவர்கள்
அச்சத்தை விஞ்சி நின்றார்கள்
ஆணவம் கொண்டு
அடாது செய்தவர்கள் - எங்கும்
அவமானம் அடைந்தார்கள்
இழிவாகப் பழித்துரைத்த சிலுவையை - வாழ்வின்
வழியாகக் கொண்டார்கள்.
அறிஞர்கள் கூடி
அறிக்கையாக காத்து வந்த வரலாறுகள் எல்லாம்
உப்பற்ற உணவாகி
குப்பைக்குள் புதைந்தன
விண்ணக வேந்தன்
மண்ணகம் வென்று - புது
காவியம் தந்ததால்

ஒரு நொடிப் பொழுதில்
மாயமாய் மறையும்
விதி வழி ஒழுகி
மடிகின்ற வாழ்வில் - இன்று
இறைவனைத் துறந்து
சிறைவதை செய்யும்
பொல்லாத கூனிகள் பொருந்திய
இணையத்தின் வலைக்குள்,
சிக்கிச் சிதைந்த - என்
இதயத்தின் ஆன்மா - எங்குதான்
இடம்பெயர்ந்து விட்டதோ? - இதனால்
விரக்தியின் விளிம்பில் நின்று
ஓங்கி ஒலித்திட - என்
கதறலின் கனியாய் விளைந்திட்ட நாளே!
உன்னை சுவைத்திட தடுக்கும் - இவ்
உலகினை உடைத்து - புது
உலகொன்றை தருவாய்

பழமையில் இருந்தே
வழமையைப் போன்று
பழுதாகிக் கழிந்த - என்
நாட்களில் ஒன்றாய் - என்னில்
புலர்ந்திட்ட இந் நாளே!
உயிர்ப்பின் நாளே!
நானும் பாவத்தை வென்று
இப்பொழுதிலிருந்தே என்நிலை வென்று - சுடும்
பாவப் புழுதியில் துடிக்கும் இதயத்தின் மேல்
ஒரு நொடிப் பொழுதேனும்
குடையாகி நிழலாக வர
எனக்கு ஒரு வரம் தாரும் - என்
விடுதலை வேந்தனே! இயேசுவே!

அருட்சகோ.ஜெ.அன்ரன் கஜீஸ்காந்த்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

## நிர்வாணம் ஆக்கப்பட்டவர்கள்!

ஆடை இன்றியோ
ஆடை குன்றியோ
ஆடை குலைந்தோ
ஆடை களைந்தோ
அம்மணம் ஆனவர்களல்ல!

ஆடை கழற்றி
நிர்வாணம் ஆக்கப்பட்டவர்கள் நாம்
ஆண்டவன் இயேசுவைப்போல!

## கரிகாலக் கலியுகம்!

இது கரிகாலந்தான்,
கலியுகம் தான்!

பாதினியச் செடிகளைப்
பசளையிட்டு வளர்ப்பதால்...

களைகளை வளர்த்துப்
பயிர்களைக் களைவதால்...

புற்களைப் போற்றி
நெற்களைப் பழிப்பதால்...

ஓநாய்க் கூட்டங்களை
ஊட்டி வளர்ப்பதால்...

இது கரிகாலந்தான்,
கலியுகந்தான்!

## அவசர வாழ்க்கை!

அவசரத்தில் இருந்து
அவசரத்தில் பிறந்து

அவசரத்தில் படுத்து
அவசரத்தில் எழுந்து

அவசரத்தில் வளர்த்து
அவசரத்தல் வளர்ந்து

அவசரத்தில் சமைத்து
அவசரத்தில் சாப்பிட்டு

அவசரத்தில் படித்து
அவசரத்தில் எழுதி

அவசரத்தில் கண்ணசைத்து
அவசரத்தில் காதலித்து

அவசரத்தில் கதைத்து
அவசரத்தில் முடித்து

அவசரத்தில் முட்டி
அவசரத்தில் மோதி

அவசரத்தில் முடிகிறது!
அவசர வாழ்க்கை!

## பிறந்தநாள் இரண்டு!

பிறக்கவேண்டியது ஒரு நாள்!
நம்மூர்களில்
பெண்பார்ப்பது போல



எண் பார்த்ததால்
என்னைப் பிறப்பித்ததோ
இன்னொருநாள்!
ஆக,
பிறந்தநாள்
எனக்கு இரண்டுநாள்!

## இன்றைய முரண்டு!

'வேண்டாம்!' என்றால்
செய்கிறார்!
'செய்' என்றால்
'வேண்டா' மென்கின்றார்கள்!

'கூடாது!' என்றால்
விரும்புகிறார்கள்
'நல்லது' என்றால்
'கூடா' தென்கின்றார்கள்!

'நில்!' என்றால்
செல்கின்றார்கள்
'செல்!' என்றால்
நிற்கின்றார்கள்!

முரண்டு நிற்பதே - இன்று
விதியாகிப் போனது!
முரண்டு பிடிப்பதே
சரியாகி விட்டது!

அருட்பணி செ.அன்புராசா (அமதி)

## வா... வா... வாழுவோம்

மாறவேண்டும் மாறவேண்டும்
உலகம் அல்ல...
உன்னை மாற்ற வேண்டும்
நிலைமை புரிந்து
நிதானம் வளர்த்து
நிதமும் நல்ல எண்ணம் வளர்த்து
வாழவேண்டும்
எம்மை மாற்ற வந்த பாலன்
வாழும் வழிகள் சொன்ன தேவன்
மாறிய கோலம் கண்டோம்
கொலைக்களத்தில் இயேசுவாக
புதுமைகள் புரிந்தார்
உயிரையும் கொடுத்தார்- உயிர்த்தார்
உண்மை அறிந்தும்
மாறினோமா நாங்கள்?
மாறவேண்டும் நீயல்ல
உன் உள்ளம் மாறவேண்டும்
உணர்ந்து வா...
உயிர் கொடுத்து
உள்ளம் எழுந்து வா...
பிறர் வாழ வழிகாட்டி வா...
வா.. வா... வாழுவோம்
இறை வார்த்தையாக....

எஸ்.பி.பீற்றர் போல்
யாழ்ப்பாணம்

## இளையோரின் நல்வாழ்வுக்கு சிறியோன் தரும் சிந்தனைகள்



அத்தனை பேரையும் நேசி - இதில்
ஆண்டவர் இயேசுவைக் கொஞ்சம் யோசி
முத்துக் கிரணத்தை வீசி - தந்தருள்வார்
அத்தனை பேருக்கும் ஆசீர்
நேரிய வானகத் தந்தை - என்றுமே
நிறைவுடன் நிற்பதைக் கண்டு
சீரிய உங்களின் சிந்தை - அதைத்
தேர்ந்து நடந்திடல் நன்று
அன்பு செய்தாருக்கு அன்பு - செய்தோமானால்
ஆனந்தம் அதிலென்ன உண்டு
அன்பு தேவைப்படுவோர்க்கு - அன்பு செய்தால்
அது தான் மானிடப் பண்பு
ஆடம்பரபிச்சை இட்டால் - லாபம்
எப்பொழுதோ வரும் உண்மை
வெளிவேடமின்றிப் பிச்சை - இட்டால்
தெய்வம் நம் வீட்டுக்குச் செய்வார் நன்மை
நல் ஒளி பரவுதல் போல் - நம் நாட்டினில்
ஒளியாய் நின்று
இல்லத்தில் மட்டுமல்ல - நாட்டினில்
எங்கனுமே வழியைக் காட்டி
செல்லுங்கள் உங்கள் - வாழ்க்கை
திரைபோட்டு மறைப்பதற்கல்ல
துல்லிய வானகத்தில் - வீற்றிருக்கின்ற
தூய தந்தை அணைத்து வரவேற்பார்

## பழிகளைச் சுமத்தி

பழிகளைச் சுமத்தி பரிகசித்தார் உயிர்
பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தாய் எனக்காக

தாளச் சிலுவை சுமக்க வந்தார்
உன்னை மாறாத்துயரால் துடிக்க வைத்தார்
எனக்காக வீழ்ந்தார் சிலுவையின் பளுவோடு
மீண்டும் எழுந்தார் துயர்களின் நினைவோடு

தாங்கிடவொண்ணா துயருற்றே
உன்னை தாங்கிய அன்னை துயருற்றாள்
மறுத்திட முடியா நிலையாலே - சீமோன்
வருத்தினார் தன்னை உன்னோடு

நிலையாய மங்கையின் சிறு துணியில்
அன்பின் விலையாயப் பதிந்தது உன் வதனம்
ஓய்வின்றி பளுவினைச் சுமந்ததனால்
அந்தோ விழுந்தாய் நிலத்தில் மும்முறையும்

விழிநீர் பெருக்கிய மகளிருக்கு
அன்பு மொழி நீ நல்கி வழி தொடர்ந்தாய்
உடைகளை களைந்திட உனைத் தந்தாய்
இரத்த மடைகள் திறந்திட மெய் நொந்தாய்

பொங்கி உதிரம் வழிந்திடவே உன்னைத்
தொங்கிடச் செய்தனர் சிலுவையிலே
தோற்றுப் போயினர் உன் உயிர்ப்பாலே
பெற்றது மீட்பு பாருலகே...

## அடிமையின் நினைவு



அம்மை அப்பன் உருக்கொடுக்க
பரம்பொருளின் உயிர் கிடைக்க
பதியதனில் படிந்திட்ட
கறை இதுவின் கனவிதுவே

சோகமதை உணவாயுண்டு
வேதனையை உடையாய் பூண்டு
காலமதன் கைப்பிடியில்
காகிதமாய் சுழலுகின்றேன்

மாளிகையில் பிறந்திருந்தால்
மாமன்னன் ஆயிருப்பேன்
சாலையதில் விழுந்ததாலே
கூடமதில் வாழ்கின்றேன்

கடவுளிற்கு கண் இல்லையோ - இலை
கண்ணியர்க்கு கடவுள் இல்லையோ
தேடுகின்றேன் நாடுகின்றேன்
ஏன் அவனும் நோக்கவில்லை

ஞாலமதை உருவாக்கி
மானுடத்தை நிலைநாட்டி
பகுத்தறிவை அவன் கொடுத்தான்
இவன் பகுத்து அறிந்து விட்டானே

சாதிமத பேதத்தினால்
மனிதர் தமை வகை வகுத்து
அடக்குகின்றான் ஒடுக்குகின்றான்
உயர்சாதி வர்க்கம் அவன்

விழுதுகளாய் விளைந்திருந்தும்
பயனென்ன இவ்வுலகில்
விழுதுகள் இல்லை என்றால்
நிலைத்திடுமோ விருட்சமது

அடிமைநிலை நீங்குதற்கு
ஒளியுள்ள வழியென்ன
இணைந்திடுவோம் பாரதனில்
அடிமை நிலை தனையறுப்போம்

து.அன்றூட் ஐக்சன் (கலைப்பிரிவு)
வாழ்வகம்
யாः யூனியன் கல்லூரி

## பேராசை வேண்டாம்



வாழ்வில்
விரும்புவது
வரவில்லையா?
வருந்த வேண்டாம்
வருவதை
விரும்புவோம்
வாழ்க்கை
வசந்தமாகும்

சோதனைகளும்
சாதனைகளாகும்

தடைக்கற்களும்
படிக்கற்களாகும்

மலைச்சுமைகளும்
மாலைச்சுமைகளாகும்

வாழ்க்கை வசந்தமாகும் - அந்த
வசந்தம்
சுகந்தமாக நறுமணம் பரப்பும்
ஏனெனில்
வாழ்க்கை வாழ்வதற்கே
வருத்தப்பட அல்ல

பெஞ்ஜமின் சோமநாதர்
தெஹிவளை

# தவக்கால நாடக மரபாகிய 'கல்லறை வாசகப்பா' – ஓர் அறிமுகம்

### பாஸ்கு நாடக மரபு

தவக்காலத்தினை ஒட்டியதாக பல்வேறு கலை இலக்கியங்கள் தமிழில் வெளிவந்துள்ளன. ஈழத்தில் வியாகுலபிர சங்கம், பேரின்பக்காதல், அன்னை அழுங் கல் ஒப்பாரி. என பல்வேறு பாடல்சார் மரபுகளும், திருப்பாடுகளின் நாடகங்க ளும் எழுதப்பட்டுள்ளன. இவை இக்காலத் தவமுயற்சிகளுக்கு பல்வேறு வகையிலும் தூண்டுதலாக அமைந்துள்ளன.

'திருப்பாடுகளின் நாடக மரபு' என அழைக்கப்படுகின்ற பாடுகளின் நாடகமர பானது 1950 களுக்குப் பின்னரே ஈழத்தில் மனிதர்கள் நடிக்கின்ற நாடக மரபாக பிரபல்யம் அடைந்தது. அதற்கு முன் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த் தப்படுகின்ற உடக்குப்பாஸ் மரபாக பல இடங்களிலும் இருந்துள்ளன.

1955 இல் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் லோங் அடிகளால் ஆசிரியர்களைக்கொண்டு கல்லூரி மைதா னத்தில் ஆங்கிலத்தில் மேடையேற்றப்பட்ட பாஸ்கு நாடகமே முதலாவது 'பாஸ்கு நாடக' மாகக் காணப்படுகிறது.

தொடர்ந்து தமிழில் மொழிபெயர்க்கபட்டு பல்வேறு இடங்களிலும் நிகழ்த்தும் பாரம்பாரம்பரியமாக இம்மரபு உருவா கியது. இதனை தமிழுக்குரியதாக்கி பல் வேறு பாடுபொருள்களில் வெவ்வேறு நாடகங்களை எழுதிய வகையில் அருட் கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளும் அவரால் உருவாக்கப்பட்ட திருமறைக் கலாமன்றமும் குறிப்பிடத்தக்கவை.

ஆனால் காலத்தால் முந்திய 'பாடுகளின் காலத்தில் நிகழ்த்தப்படுகின்ற இயேசுவின் உயிர்ப்புடன் தொடர்புபடுகின்ற, 18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கூத்து வடிவ நாடக இலக்கியமாகிய 'கல்லறை வாசகப்பா' காணப்படுகின்றது.அது பற்றிய அறிமுகத்தினை இன்றைய கலைக்காவ லன் வழங்குகின்றது.

### கல்லறை வாசகப்பா

'வாசாப்பு' (வாசகப்பா) என்ற நாடக வடிவம் ஒரு கூத்து வடிவமாக ஈழத்தில் குறிப்பாக கத்தோலிக்கர்கள் மத்தியில் வழங்கி வந் துள்ளது. இப்பொழுதும் மன்னார் மாவட்டத் தில் கூத்துக்களைப் போலவே பல் வேறு வாசாப்புக்கள் மேடையேற்றப்படுகின் றன. 'சந்தியோகுமையோர் வாசாப்பு', 'அந்தோனியார் வாசாப்பு' 'மூவிராசாக்கள் வாசாப்பு', 'சற்பிரசாத வாசாப்பு' போன்ற பல வாசாப்புக்கள் மேடையேற்றப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலும் பல வாசாப்புக்கள் மேடையேற்றப்பட்டு தற்போது முற்றாக வழக்கிழந்துள்ளன. 'வாசகப்பா' என்பது பாட்டும் வாசகமும் கலந்து வருகின்ற நாடகங்களே வாசகப்பா என்றும், பின்னர் அவை 'வாசாப்பு' என்றும் மருவியும் வந் துள்ளன. இதனை கூத்து வடிவமாக குறிப்பாக கிறிஸ்தவ கூத்து மரபாகவே ஆய்வாளர்கள் கொள்ளுகின்றனர். இத்த கைய பின்னணியில் தமிழகத்தில் காம நாயக்கம்பிட்டி என்ற கிராமத்தில் பாரம்பரிய மாக நிகழ்த்தப்படுகின்ற ஒரு நாடகமே 'கல்லறை வாசகப்பா' ஆகும். இவ்வாச கப்பா நூலை அண்மையில் திரு ஆ.சிவ சுப்பிரமணியம் அவர்கள் பதிப்புச் செய் துள்ளார்கள்.

புனிதர்கள் வேதசாட்சிகளின் வரலாறுகளே ஈழத்தில் வாசாப்பு வடி வங்களாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு என்பவற்றை கூத்துவடிவமாக ஈழத்தில் நிகழ்த்தியதற்கு சான்றுகள் இல்லை.

இத்தகைய சூழலில் காமநாயக்கம் பிட்டியில் 1830 இல் எழுதப்பட்டதாக கருதப்படுகின்ற கல்லறை வாசகப்பாவானது முழுமையான இயேசுவின் பாடுகள் மரணத்தின் பின்னான உயிர்ப்பினை சித்திரிக்கின்ற வாசாப்பு (கூத்து) வடிவ மாகும். இதனை அவர்கள் "வாரக்கணக் காக ஆன்மீகத் தயாரிப்போடு காத்திருந்து. இயேசு பாடுபடும் பல்வேறு நிகழ்வுகளில் மனதை இருத்தி... வேப்பெண்ணை குடித்து சிந்தித்து... சிலுவையில் உயிர் விட்ட யேசுவுக்கு கோடித்துணி போட்டு.... உயிர்விட்ட மகனை மடியில் கிடத்தி புலம்பியழும் மாதாவோடு தாமும் புலம்பியழுது சொந்த குடும்பத்தின் இழப்பு நிகழ்ச்சிபோல யேசுவின் பாடையோடு




உடன் நடந்து...

இதெல்லாம் எமக்கு வெறும் பொழுதுபோக்கு அல்ல அது ஒரு சமூக ஆன்மீக நிகழ்வு என்று வாழ்ந்து காட்டுகின்றார்கள்" (கல்லறை வாசகப்பா, 2007, ஆ.சிவசுப்பிரமணியம்) என முனைவர் அருட்திரு சேவியர் அந்தோனி குறிப்பிடுகின்ற அளவில் மிகவும் பக்தி பூர்வமாக நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது.

### ஈழத்தில் எழுதப்பட்ட வாசாப்பு.?

இந்த வாசகப்பாவினை ஆய்வு செய்து பதிப்பு செய்துள்ள சிவசுப்பிரமணியம் அவர்கள், இந்நாடகம் ஈழத்தில் எழுதப்பட்டி ருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். புலசந்தோர் பாத்திர வரவில் குறிப்பிடுகின்ற "வாண குருநகராலயத்தின் முன்னே ஆகமத்தின் நூல் பயிற்ற அன்பாய்த்தானும் மானந்தச்சபையில் வந்து தோன்றினாரே" என்ற பாடலடியினை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் குருநகர் ஆலயத்தில் மேடையேற்றப்படுவதற்காய் யாழ்பாணத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும், அதற்கு ஆதாரமாக வாசாப்பில் உள்ள சில சொற்கள் யாழ்ப் பாணத் தமிழில் வழங்கியுள்ளமையையும் ஆய்வாளர் கூறுகின்றார்.

ஆனால் குருநகரில் கூத்துவடிவில் இயேசுவின் பாடுகள்,அல்லது உயிர்ப்பு நிகழ்த்தப்படவில்லை என குருநகர் கிரா மம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட வர்கள் கூறுகின்றனர்.

எனினும் சில காலத்திற்கு முற்பட்டதாக இவ்விடயம் இருந்திருக்குமா என்பது ஆய்வுசெய்யப்பட வேண்டிய விடயமாகும்.

### கிராமிய நாடக வடிவம்

இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு ஆகியவற்றினைத் தியானிக்கின்ற தவக்காலத்தில் பல்வேறு பக்தி முயற்சிகளும் அவற்றுடன் இணைந்த கலைப் பாரம் பரியங்களும் பல்வேறு இடங்களிலும் வழக்கிலுள்ளன. காமநாயக்கம்பிட்டியில் அம்மக்கள் இதனை மிகவும் பக்திபூர்வமாக நிழ்த்தியுள்ளனர்.

இயேசுவின் பாடுகள் மரணத்தினை பெரிய வியாழன் பெரிய வெள்ளி தினங் களில் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தி விட்டு, இவ்வாசாப்புவினை பெரிய சனி இரவில் நாடகமாக நிகழ்த்தியுள்ளனர். இதன் எழுத்து வடிவினை நோக்கும்போது பண்பாட்டு மயமாக்கப்பட்ட கிராமிய நாடக வடிவத்திலேயே இது ஆக்கப்பட்டுள்ள மையை காணக் கூடியதாகவுள்ளது.

வேதாகமத்திலுள்ள சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டாலும் சில கற்பனைகளுடன் இதனை ஆக்கியுள்ள னர். பாடல்களிலும் கிராமிய பின்ன ணிகள் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக சம்மனசுகளின் புகழ்ச்சிப் பாடலானது இந்துக்கள் கூறுகின்ற 'நமோ' என்ற புகழ்ச்சிப் பாவாக காணப் படுவதனை குறிப்பிடலாம்

*"ஆதிமூலமான ஏகனாதியே நமோ*
*அன்னைமாமரிபுதல்வா அற்புதா நமோ*
*சோதிரூபனே சுயம்பிரகாசனே நமோ*
*சொல்லருங்கருணைநிறைவல்லவாநமோ"*

அத்துடன் 'யெத்திப்பேய்' என்ற பாத்திரம் கிராமிய மரபில் கூறப்படுவது. அதனை லூசிபருடன் இதன் கதையில் தொடர்புபடுத்தியுள்ளனர். 'தர்க்கம்' 'தரு'




போன்ற கூத்துக்குரிய அளிக்கை முறை களுடனேயே நாடகம் ஆக்கப்பட்டுள்ளது.

**காவலூர் யோவான்**

### கதை அமைப்பு

இதன் கதை அமைப்பினை நோக்கும்போது புலசந்தோர் என்னும் பாத் திரத்தின் மூலமாக கதை ஆரம்பிக்கப்பட்டு பிலாத்துவின் வருகை, பிலாத்துவோடு கைப்பாஸ் பரிசேயர்கள் வாதிடுவது, கல்ல றைக்கு காவல் வைக்க ஏவுதல், தொடர்ந்து லூசிபர் என்னும் பேய் குட்டிப்பேய்களுடன்



தோன்றி இயேசுவினால் தமக்கு நட்ட மென்றும் அவரது போதனைகளை மக்கள் கேட்டு நடந்து வருவதானால் நரகிற்கு வரும் மக்கள் தொகை குறைவதாகவும் வேதனை அடைந்து குட்டிப் பேய்களை வேதத்தை மறுதலிக்கும் மக்களை உரு வாக்க தூண்டுகின்றது. பின்னர் இயேசு வின் உயிர்ப்பு நிகழ்கின்றது.

இயேசு உயிர்த்ததை அறிந்து கைப்பாஸ் வாதிடுதல். சேவகர் வந்து யேசு உயிர்தெழுந்ததனை பிலாத்துவுக்கு சொல்லுதல், பிலாத்து தவறை நினைத்துப் புலம்புதல், கைப்பாஸ் யெத்திப் பேயால் குழப்பப்பட்டு இயேசுவின் உடலை சீடர்கள் கொண்டு சென்று மறைத்துவிட்டனர் என்று பொய்யான வதந்தி பரப்புதல், அப்பாவத்திற் காக யெத்திப்பேய் கைப்பாசை நரகத்திற்கு கொண்டு செல்வதற்காக வருதல் என்பது டன் நாடகம் நிறைவு பெறுகின்றது.

இக்கூத்தினை பெரிய சனி இரவு முழுவதும் நிகழ்த்தி தாங்காமல் அதிகாலை யில் உயிர்ப்பு விழா திருப்பலியில் மக்கள் பங்குகொள்வதுடன் நிறைவு செய்துள் ளார்கள்.

எனவே கல்லறை வாசாப்பா னது கிராமிய கூத்துவடிவமாக காமநாயக் கம்பிட்டியில் சடங்குடன் இணைந்த நாட கவடிமாக, தவக்கால பக்தி முயற்சியு டன் இணைந்ததாக நிகழ்த்தப்பட்டு வந் துள்ளது.

இதனை நிகழ்த்தும்போது காணப்பட்ட சில ஒழுக்க முரண்பாடுகளினால் குருக்க ளால் சிலகாலம் தடைசெய்யப்பட்டும் காணப் பட்டுள்ளது. அதனால் இம்மரபு அங்கு வழக்கற்றுப்போயுள்ளது என்பதனை சிவ சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.

ஈழத்தில் நிகழ்த்தப்பட்ட உடக்குப் பாஸ் மரபும் இவ்வாறு சிலகாலம் ஆயர்களினால் தடைசெய்யப்பட்டிருந்தமை யும் குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்தே அம்மரபு எம்மத்தியில் பெருமளவில் வழக்கற்றுப்போயுள்ளது. திருச்சபையின் ஆன்மீக விசுவாசத்திற்கும் மக்களின் சமூகவியல் பாரம்பரியங்கள் நடத்தை களுக்கும் இடையிலான முரண்பாடுகள் இவ்வாறான கலை வடிவங்களின் இறப்பிற் கும் காரணமாகி இருப்பதனை வரலாற்றில் நோக்கமுடியும்.

மக்களுக்கு விசுவாச உண்மைகளில் தெளிவினை ஏற்படுத்துவதும் இவ்வாறான மரபுகளை தொடர்ந்தும் அர்த்தத்துடன் பேணுவதற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் எமக்கான தனித்துவமான பண்பாட்டு மயப்பட்ட கலை இலக்கியப் பாரம்பரியங் கள் எம்மத்தியில் வாழும்.

# காவலன் கலசம்

# நித்திக்குட்டியின் பொம்மை



நதியில் நீந்திக்கொண்டிருக்கும் இரவின் நிலவு எவ்வளவு நேரம் தண் ணீரில் ஊறிக் கிடந்தாலும் அதற்கு குளிர்வதே இல்லையா என அடிக்கடி நினைப்பதுண்டு. பக்கத்து வீட்டு ஜெயந்தி அக்காவின் நித்திக் குட்டி. அவளின் பொம்மையைக் குளிக்க வார்க்கும் போதும் இந்தப் பொம்மைக்கு நடுங்காதோ என நினைப்பதுண்டு. நித்திக் குட்டி சிரித்துக்கொண்டோடும் சிற்றோடை. குடும்பத்தை றோஜாத் தோட்டமாக்கி விடுகிற பட்டாம்பூச்சி.

நித்திக்குட்டியின் பகல்களும் இரவுகளும் அவளின் பொம்மையினால் நிறைந்து கிடக்கின்றன. அந்தப் பொம்மை அவளின் ஈர முத்தங்களாலும், அணைப்புக்களாலும் நிறைந்தது. விடிந்த பிறகும் முடிந்து போகக்கூடாது என நாம் ஆசைப்படும் அழகான கனவுபோல அவள் தூக்கம் கலைந்த பின்னும் தன் பொம்மைய நெஞ் சோடு அணைத்த கரத்தை விலக்குவதே இல்லை.

நித்திக்குட்டி தன்னுடைய பொம் மைக்கு மஞ்சள் பூப்பூத்த சட்டை போட்டு, கறுத்தப் பொட்டு வைத்து, முகத்திற்கு பவுடர் பூசி அதற்குப் பசிக்கும் என்று தன் சோற்றில் எடுத்து ஊட்டி விடுவதைப் பார்க்கும் போதெல் லாம் ஒரு பொம்மையாக மாறி அவளின் அவ்வளவு அன்பையும் உறிஞ்சிக் குடித்து விட முடியாதா என ஏங்குவதுண்டு. தன்னைப் போலவே அந்த பொம்மையை யும் நேசிக்க எப்படி முடிகிறது அவளால்?

வெள்ளை மணல் பரப்பி சுற்றிவர பனை மரக்குத்திகள் மண் அணைத்துக் கிடந்த மணல் திட்டில் விளையாடிக் கொண்டிருந்த நித்திக்குட்டியின் பொம் மையை வேண்டுமென்றே பறித்து கழற்றக் கூடிய அதன் கையைப் பிடுங்கினேன். "ஐயோ" என் பொம்மைக்கு வலிக்குமே என வீருட்டுக் கதறி அழுத அவளின் கண்ணீரின் ஈரத்தில் நான் நனைந்து போனேன். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்கிற மனசு. குழந்தைகளின் மனசு தானோ. பொம்மைக்குத்தானே வலிக்கிறது. குழந்தை ஏன் அழுகிறது? பல மனிதர்கள் கடந்து போகிற தெருவில் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் துடிக்கும் யாரோ மனிதனின் வலியை, தன் வலியாக உணர்ந்து உதவிட ஒரு சமாரியனால் மட்டும்தானே முடிந்தது. அவனது மனதிலும் ஒரு குழந்தை மிஞ்சும் இருந்திருக்குமோ?

நாங்கள் எல்லாம் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள் தானே. பல வேளை மறந்தே போகிறோம். ஈழமாகி கிடந்த இதயம், வளர வளர இறுகிப் பாறையாகி விடுகிறது. "யார் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன? எனக்கு ஏன் தேவையில்லாத வேலை?" என முதிர்ச்சியான வார்த்தைகளோடு எம் தெருவழியே விழுந்து துடிக்கும் பல மனிதர்களைக் கணக்கெடுக்காது கடந்து போய்க்கொண்டிருக்கிறோம்.

உயிருக்குயிரான தன் கண வனை இழந்த ஒரு இளந்தாய் 'என்ர அவர் இறந்தபோதே நானும் செத்துப் போயிருப்பேன். அவர் இல்லாத ஒரு நிமி சம் கூட என்னால் வாழமுடியாது என்று விம்மியபடி தன் பக்கத்தில் ஒரு சின்ன சித்தரமாய் அமர்ந்திருந்த தன் குழந்தை யைத் தூக்கி நெஞ்சோடு அணைத்தபடி "என்ர குழந்தையால்தான் இன்னைக்கும் உயி ரோட இருக்கிறன்" என்றார் மிக நிதான மாக. ஒரு குழந்தை ஒருத்தியை உயிர் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி, அம்மம்மா, தாத்தா, மாமாக்கள், சித்திமார் எனப் பலருடைய சந்தோசங்கள் ஒரு சின்னக் குழந்தை யைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டிருக் கிறதே. அக்காவின் கடைக் குட்டியின் அர்த்தம் விளங்காத மழலை வார்த்தைகள் கேட்டு, ஒரு ஈரமுத்தம் பெற்றுவர எவ்வளவு தூரம் தாண்டியும் போக மனசு துடிக்குமே. குழந்தைகள் பக்கத்தில் இருப்ப வர்களுக்கு சந்தோசத்தை பரிசாக்கின்றனர். அடுத்த வருடைய வாழ்வின் தேனீர்க் கோப்பைக் குள் கொஞ்சம் சீனி சேர்த்து வாழ்வை இனிப்பாக்கி விடுகின்றனர். ஒரு மனிதனையேனும் நான் வாழவைக்க வில்லை என்றால், நான் இறந்து போகிற போது பூமியில் ஒரு பாரம் குறைந்துபோகிறது என யாரும் நினைத்துவிட்டால் எதற்கு இந்த வாழ்வு?

இதனால்தான் இயேசு "சிறு பிள் ளைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. இறையாட்சியைச் சிறு பிள்ளையைப் போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்பட மாட் டார் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். (லூக்.18:16-17) என்று சொன்னாரோ?

இயேசுவின் உயிர்ப்பு சொல் வது என்ன? மீண்டும் குழந்தைகளாகப் பிறக்க வேண்டும் என்பதா? உங்களுக் குள் இருக்கும் குழந்தைகளை இறந்து போக விட வேண்டாமே. ஒரு சிறிய விதைக்குள்ளே ஒரு காடே குடியிருக்கி றதே. ஒரு விதை இறக்கும்போது ஒரு காடு இறந்து போகிறது. விண்ணரசில் நுழைவதற்கான அத்தனை இரகசியங்க ளும் இந்த குழந்தை என்ற விதைக் குள்ளே ஒழிந்து கிடக்கிறதே. ஒரு குழந் தையாக மாறி ஒழுகும் மழையில் நனைந்தபடி காகித ஓடம் விடும் மனசு எவ்வளவு கொண்டாடமயமானது. எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள் என்பது தான் இறைவனின் சித்தமாய் இருக்கிறது.

நான் பூசை முடிந்து திரும்பி வெளியே வந்து கொண்டிருந்தேன். கோயில் வாசலில் காவிபடிந்த கந்தல் சாறத்தோடு தாசு படிந்த நீண்ட வெள்ளைத் தாடியோடு, பிச்சை எடுத்துக்கொண்டிருந்த ஒரு கிழவனின் மடியில் ஒரு குழந்தை ஏறி நிற்கிறது. குட்டியான சிவப்பு பாவாடையும், வெள்ளைப் புள்ளி வைத்த கறுத்த சட்டை யும் போட்டிருந்த ஒரு குட்டித் தேவதை. அதிசயமாய் பார்த்தேன். அவள் அந்த முதியவரின் தாடி மயிர்களைப் பிடித்து சிரித்து விளையாடியபடி நின்றாள். கிழ வன் முகத்திலும் ஒரு நிறைந்த சிரிப்பு. இன்னொரு குழந்தையாக மாறி நின்றார். தங்களை காருக்குப் பக்கத்தில் குழந்தை யைக் காணாமல் தேடிய பெற்றோர். ஓடி வந்து குழந்தை கிழவனிடமிருந்து பிடுங்கினார்கள். குழந்தைக்கு அடித்து "சீ.... என்ன பழக்கம், ஊத்தப் பிச்சைக்காரன்ர மடியில நிண்டு விளையாடிக்கொண்டு..." தாயின் தோளில் கிடந்தபடி "மாமாபோய்ற்று வாறேன்" என கை காட்டியது குழந்தை. அந்தக் கிழவனின் கண்களில் வழிந்தது ஆனந்தக் கண்ணீர்.

அந்தக் குழந்தையின் உலகில் பிச்சைக்காரர்கள் பார்த்துச் சிரிக்கக் கூடாத வர்கள், அன்பாய் பேசக் கூடாதவர்கள், யாரும் இல்லை. அவளின் உலகில் எல்லோ ரும் அவளின் உறவான மாமாக்கள் எத்தனை மனிதர்களைக் கசக்கி எறிந்த காகிதங்களாகக் கருதி கடந்த போகிறோம்?

மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காணமுடியாது என நிக்கதேமுக்கு இயேசு சொன்ன செய்தி யைத்தான், தன் உயிர்ப்பின் செய்தியாக எனக்கும் சொல்கிறாரோ!

[illegible]

---

# தலைமைத்துவம்

தலைவன் எப்போதும் சிறந்த பணியாளனாக வழிகாட்டியாக நிகழவேண் டும். இயேசுக் கிறிஸ்து தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி சிறந்த தலைமைத்து வத்திற்கு அடையாளமாக உன்னத குரு வாகத் திகழ்ந்தார். இயேசுவின் பாதையில் திருத்தூதர்களும் தமது மறை அறிவிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்தியாவில் முதல் தடவையாக அக்கினி ஏவுகளை விண்ணுக்கு அனுப்பிய போது அது சென்ற 36 ஆவது நிமிடத்தில் வெடித்துச் சிதறியது. அப்பொழுது அதன் தலைமைப் பொறுப்பதிகாரி ரதீஸ்திவானின் குழுவிடம் தோல்வி குறித்து கேள்வி எழுப்பிய போது அப்துல்கலாம் பதிலளிக்க முன் வந்த போது அதன் தலைவராக இருந்த ரதீஸ் திவான் தான் ஒலிவாங்கியை வாங்கி அதன் முழுமையான தோல்விக்கும் நானே பொறுப்பேற்பதாக கூறினார்.

தலைமைத்துவம் என்பது தோல்விகள், சவால்கள் வரும்போது அதனை ஏற்றுக் கொள்வதும் முகங்கொடுப்பதுமாகும். அதன் பின் அக்கினி ஏவுகணை வெற்றிகர மாக அனுப்பப்பட்டு வெற்றியடைந்தார். மீண் டும் பத்திரிகையாளர்கள் அக் குழுவினரைச் சந்தித்தபோது அப்துல்கலாமை தகவல் வழங்குமாறு பணிப்புரை வழங்கினார். தலைமைப் பொறுப்பதிகாரி சதீஸ் திவான். ஆம் வெற்றி என்று வரும்போது அடுத்த வருக்கு சந்தர்ப்பம் அளிப்பதும்சிறந்த தலைமைத்துவமே.

ஓவியர் ரவிவர்மாவுக்கு பாராட்டும் விருந்துபசார நிகழ்வு ஒன்றையும் ஆளுனர் ஏற்படுத்தியிருந்தார். ஆளுனரின் விருந்து நிகழ்வுக்குப் புறப்பட்டபோது அவரது சாரதி யின் திடீர் சுகவீனத்தினால் தானே வாகனத் தினைச் செலுத்தி தனது சாரதியை வைத்திய சாலையில்சேர்ப்பித்தார். அவருக்குத்துணை யாக ஒருவர் நிற்கவேண்டும் என ரவிவர் மாவே அவருக்கு துணையாக நின்றார். ஆளுநரின்அழைப்பிற்குகீழ்ப்படியாமையால் விளக்கம் கோரப்பட்டது. அப்போது ரவிவர்மா ஒருவருடைய துன்பத்தில் பங்குகொண்டு அவனது துன்பத்தைப் போக்குவதே விருந் தினை விடச் சிறந்தது எனப் பதிலளித்தார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியின் கீழ் பொறியியலாளராக கடமையாற்றியஒருவன் ஒரு நாள் வேலைக்கு வரும்போது அப்துல் கலாமிடம் இன்று எனது மகளுக்கு பிறந்த நாள் எனவே, பிற்பகல் 5.00 மணிக்கு செல்வதற்கு அனுமதி கேட்டிருந்தார். கலா மும் அனுமதியளித்தார். ஆனால் அப் பணியாளர் தனது வேலையிலே மூழ்கிப் போயிருந்ததை அவதானித்தார் அப்துல் கலாம். தனது வேலை முடிவுறும் போது தான் அவருக்கு நினைவுக்கு வந்தது. தனது மகனின் பிறந்த தினமென. புறப்பட்டு மகளுக்குப் பரிசுப் பொருளும் வாங்கி வீடு சென்றபோது வீட்டிலே என்றுமில்லாத வகை யில் பிரமிக்கக்கூடிய வகையில் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருந்தது. "அப்பா நீங்கள் தான் வரவில்லை. ஆனால் எமது நாட்டின் ஜனாதிபதி வந்து என்னை வாழ்த்தி பரிசுப் பொருளும் தந்து சென்றார்" என்றபோது சிறுமியின் தந்தை தனது தலைமைத்துவத்தை நினைத்துப் பெருமைப்பட்டார்.

கிறிஸ்தவ மாணவர்களாகிய நாம் ஒவ் வொருவரும் எம்முன்னே வாழ்ந்து காட்டிய நல்ல தலைமைத்துவத்தின் சிறந்த பண்பு களை எமதாக்கி உன்னத தலைவனா கிய இயேசுவின் பாதையில் தலைவன் தலைவி ஆகுவோம்.

***திருஜா பிரேமச்சந்திரன்*** (A/L 2019)
***கொழும்புத்துறை இந்து ம.வி.***

---

# எழுச்சிமிகு எண்ணங்கள் எம் மன ஆற்றலைப் பெருக்கும்

பதின்நான்கு வயதுள்ள சிறுமி ஒருத்தி இதயநோய் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். வைத்தியசாலையில் காற்றோட்டமான மேல்மாடி அறையில் அவளைத் தங்க வைத்திருந்தார்கள். அவளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஓவியர் ஒருவர் அடிக்கடி வந்து அவளைப் பார்த்துச் செல்வார். சிறுமியும் நேரப் பொழுது போக்கிற்காக ஜன்னல் ஓரம் வந்து ஒரு செடியைத் தினமும் கவனித்து வந்தார். அந்தச் செடியோ பட்டுப்போக ஆரம் பித்தது. தினமும் ஓர் இலையாக உதிர்ந்து கொண்டே வந்தது. சிறுமியின் உள்ளத்திலே ஒரு எண்ணம் வந்தது. இந்தச் செடியைப் போல் நானும் பட்டுப்போக ஆரம்பித்துள்ளேன். தினமும் ஓர் இலை உதிர்வதைப் போல நானும் உதிர்ந்து கொண்டே இருக்கிறேன் என எதிர்மறையான எண்ணங்களை தன்னுள் விதைத்துக் கொண்டாள். இது அவளது மனதை, உடலைப் பாதித்து நாளுக்கு நாள் தான் வலுவிழந்து வருவதை உணர்ந்தாள்.

ஒரு நாள் ஓவியர் அவளைப் பார்க்க வந்தபோது அவள் ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்தாள். அப்போது செடியில் சில இலைகள் மட்டுமே இருந்தன. அவள் ஓவியரிடம் "இந்தச் செடியில் இலைகள் உதிர்வது போல நானும் உதிர்ந்து கொண்டே இருக்கிறேன். இன்னும் சில நாட்களுள் அந்த இலைகளும் உதிர்ந்துவிடும். நானும் இறந்து விடுவேன்" என்றாள். சிறுமி எதிர்மறையான எண்ணங்களால் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்த ஓவியர் அதிர்ச்சியடைந்தார். ஓவியரோ அவளிடம் இந்த சில இலைகளும் இனி உதிராது அந்தச் செடி துளிர்க்க ஆரம்பித்து விட்டது. நீயும் சாகமாட்டாய், நீயும் தளிர்விட்டு வளர்வாய் எனக் கூறிச் சென்றார்.

அன்று இரவு ஓவியர் அவள் தூங்கும்போது செடிப்பக்கம் சென்று அங்கு இலை கள் உதிர்ந்து விழாதபடி செய்தார். மேலும் நன்கு தளிர்விட்டு வரும் பாவனையாக இலை உதிராத ஒரு செடியின் அழகான ஓவியம் ஒன்றினையும் வரைந்து அதன் அருகே வைத்திருந்தார்.

மறுநாள் சிறுமி அதனை அவதானித்தாள். இலை உதிரவில்லை அதற்கு மறுநாளும் உதிரவில்லை. மாறாக மேலும் ஓர் இலை காணப்பட்டது. அருகே இருந்த ஓவியத்தையும் பார்த்தாள் சிறுமியின் மனம் மகிழ்ந்தது. "இனிமேல் நானும் சாகமாட்டேன், தளிர்விட்டு வளர்வேன்" என்ற நம்பிக்கை உள்ளத்தில் ஏற்பட்டது. சில நாட்களில் இதய நோயிலிருந்து குணமாகி சிறுமி வீடு சென்றாள்.

நம் எண்ணங்கள் எவ்வாறு இருக்கிறதோ அவ்விதமே நம் வாழ்வும் அமைகி றது. நல்ல எண்ணங்களை, சிந்தனைகளை நினைத்தால், விதைத்தால் நல்லவையே நடக்கும். நல்ல செயல்களை அறுவடை செய்யலாம். அவரி விதையை விதைத்துவிட்டு அதிலே சுவையுள்ள கனியைப் பறிக்க முடியாது. எமது உள்மனம் ஆற்றல் மிக்கது. மனோ பலத்தினால் சாதனைகள் படைக்க முடியும். எனவே எதிர்மறையான தீய எண்ணங்களை தவிர்ப்போம். நேரான எண்ணங்கள் உயிர்கொடுக்கக் கூடியளவு நல்ல எண்ணங்களை உள் மனதுக்கு அனுப்பி செயலாக்கம் பெற்று வாழ்வை வளமாக்குவோம். எழுச்சிமிகு எண்ணங்கள் எம் மன ஆற்றலைப் பெருக்கும்.

கிறிஸ்தியா கருணாநிதி
கொழும்புத்துறை இந்து ம.வி (உயர்தரம் - 2019)

# இறைவனில் நிறை உறவு

*முதலாகி முடிவாகி இருப்பவர்*
*முழுதான அன்பாகி இயங்குபவர்*
*மூன்றாகி ஒன்றானவரே இறைவன்*

அவர் உயிர் கொடுக்கும் தந்தையாக, உண்மையின் வழிவாய் வாழ்வுக்கு வழி காட்டும் இயேசுவாக, அன்பிற்கு ஆதரமாய் இருக்கும் ஆவியாக விளங்குகின்றார். இந்த ஒன்றிப்பு, இந்த அன்புறவு, எமது நாளாந்த வாழ்க்கையில் பிரதிபலிப்பதையே இறைவன் விரும்புகின்றார்.



**உயிர் கொடுப்பவர் இறைவன்**

உயிர் கொடுத்து, மனுக்குலத்தை உய்விப்பவரே இறைவன். அவர் ஒருவரே என்பது பொதுவாக இஸ்ராயேல் மக்களால், இஸ்லாமியர்களால், கிறிஸ்தவர்களால், சைவசயமத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் கொள்கையாகும். ஒரு கடவுள் கோட்பாடு மேற்படி சமயத்தினரின் வாழ்க்கை முறைகளிலும் வழிபாட்டு முறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இறைவன் இஸ்ராயேலரின் குலமுதுவலாகிய ஆபிரகாமோடு, தொடர்பு கொண்டு அவரை ஆசீவதிக்கின்றார். "உன் வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசீர் பெறும்." (தொ. நூல் 12:3) என்ற அருள் வார்த்தையை ஆபிராகாமிற்கு சொல்லி இறைவன் இஸ்ராயேலரின் வரலாற்றில் தம்மை வெளிப்படுத்தினார்.

அதே கடவுள் ஈசாவுக்கு தோன்றி "உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நாமே! அஞ்சாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன். உனக்கு ஆசீர்வழங்கி என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்." (தொ.நூல் 26:24) என்றார்.

"உன் மூதாதையராகிய ஆபிரகாமின், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே" என்று யாக்கோப்பிற்குத் தன்னை அறிமுகம் செய்யும் கடவுள், "உன் வழிமரபோ, நிலத்தின் மண்ணுக்கு ஒப்பாகும்" (தொநூல் 28:13-14) என்று ஆசீர்வதிக்கின்றார். "உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோப்பின் கடவுள் நாமே!" (வி.ப3:6)

"இருக்கின்றவராக இருக்கின்றவர் நாமே!" (வி.ப3:14) என்று தம்மை அறிமுகம் செய்கின்றார்.

இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுக்க இறைவன் கருவியாக மோசேயைத் தேர்தெடுத்தார். "நான் திக்குவாயன்" என்று கூறி பின்வாங்க முயற்சித்தாலும் இறைவன் அவரை விட்டுவிடவில்லை. எகிப்தில் பத்துப்பெரும் துன்பங்களைப் பெருகச்செய்து, இஸ்ராயேலர் எகிப்திலிருந்து வெளியேறுவதற்கான சூழலை இறைவன் உருவாக்கினார். மோசே இஸ்ராயேலருக்கு இறைவனின் திட்டத்தை விளக்கினார். பாஸ்கா ஆட்டினை அடித்து, அந்த இரத்தத்தை கதவு நிலைகளில் பூசுமாறு சொன்னார். தலைமுறை தலைமுறையாக இதை விளக்குமாறு அவர்களுக்குப் பணித்தார்.

"இது ஆண்டவரின் பாஸ்காப் பலி. அவர் எகிப்தியரை சாகடித்தபொழுது எகிப்திலுள்ள இஸ்ராயேல் மக்களின் வீடுகளைக்கடந்து சென்றார். இவ்வாறு தம் வீடுகளிற்கு மீட்பளித்தார்" (வி.ப 12:27) என்றுமோசேமக்களுக்குஎடுத்துரைத்தார். விடுதலைப்பயணத்தின்போது இஸ்ராயேலர் பல துன்பங்களுக்கு ஆளாகினார்கள். எதிர்பாராத் தடைகள் ஏற்பட்டதும், வல்லமையுள்ள இறைவனின் நம்பிக்கையில் தளர்வுற்றவர்களாகிக் காணப்பட்டார்கள். "எகிப்தில் சவக்குழி இல்லையென்றா நீர் எங்களை பாலைவனத்திற்கு சாவதற்கு இழுத்து வந்தீர்? பாலைநிலத்தில் சாவதை விட எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம்" (வி.ப 14:11-12) என்று இஸ்ராயேலர் மோசேக்கு எதிராக முணுமுணுத்தார்கள். எனினும் மோசே இறைவனில் நம்பிக்கை கொள்ளுமாறு அவர்களை உற்சாகப்படுத்தினார்.

"அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள். இன்று ஆண்டவர் தாமே உங்களுக்கு ஆற்றும் விடுதலைச் செயலைப்பாருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை. ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார் நீங்கள் அமைதியாக இருங்கள்" (வி. ப. 14:13-14) என்று இறைவன் கூறியவாறு கையைக் கடல்மேல் நீட்டவே கடல் திரள் பிரிக்கப்பட்டது. வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் உள்ள நீர்த்திரள் அவர்களுக்குச் சுவராக அமைய இஸ்ராயேலர் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். அவர்களைத் துரத்திய எகிப்தியர் நடுக்கடல்வரை வந்தனர். அப்பொழுது ஆண்டவர் எகிப்திய அணிவகுப்புக்களை

**அருட்பணி. வின்சன் பற்றிக் (அமதி)**

நிலைகுலையச்செய்தார். ஆண்டவர்சொற்படி மோசே மீளவும் கடல்மேல் கையை நீட்டவே கடல் பழைய நிலைக்குத் திரும்பியது. பாரவோனின் படைகள் அனைத்தும் ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

அப்பொழுது மோசேயும் இஸ்ராயேலரும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடியது: "ஆண்டவருக்குப் புகழ் பாடுவேன். ஏனெனில், மாட்சியுடன் வெற்றி பெற்றார்."

ஆண்டவர் என்பது அவர் பெயராம். பார்வோனின் தேர்களையும் படைகளையும் அவர் கடலில் தள்ளிவிட்டார். ஆண்டவரே தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் யார்? தூய்மையில் மேலோங்கியவர் புகழ்ச்சிக்கு உரியவர். அரும் செயல் ஆற்றுதற்கு உரியவர். நீர் உமது வலக்கையை நீட்டினீர், நிலம் அவர்களை விழுங்கிவிட்டது. நீர் மீட்டுக்கொண்ட மக்களை உம் பேரருளால் வழிநடத்திச்சென்றீர்" (வி.ப 15:1-5).

"இஸ்ராயேலே செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர், உன் முழு ஆற்றலோடு, உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக" (இ.ச 6:4).

"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் தம் வலிமைமிகு கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புரிந்த அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் நினைவில் நிறுத்துங்கள்" (இ.ச 7:19). இவ்வாறு விடுதலைப் பயணநூல், இணைச்சட்டம்,ஆகியன மூலமாக இஸ்ராயேலர் "கடவுள் ஒருவரே" என்ற இறைக்கோட்பாட்டில் நிலைத்து நிற்க நினைவூட்டப்பட்டார்கள்.

"உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள், விண்ணுக்கும், மண்ணுக்கும் ஆண்டவராம். ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார்" (தி.பணி17:24-27).

"வரங்கள் பலவகை. ஆவியானவரோ ஒருவர்தான். திருப்பணிகள் பலவகை. ஆண்டவரோ ஒருவர்தான். ஆற்றல் மிக்க செயல்கள் பலவகை, கடவுள் ஒருவர்தான். அவரே அனைத்தையும் அனைவரிலும் செயலாற்றுகிறார்" (கொரி12:4-6).

இறைவனைத் தேடுபவர்கள் நிச்சயமாக அவரைக் கண்டுபிடித்தே தீருவார்கள். அவர் நம் ஒவ்வொருவருக்கும் மிக அருகிலேயே வாழ்வதை எமது சகோதர, சகோதரிகளில் அவர் செயற்படுவதைக் கண்டுணர்வது சாத்தியமே.

---

# இவர்களின் உயிர்ப்பு எப்போது?

"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள், விண்ணரசு அவர்களதே" என்றார் இயேசு கிறிஸ்து.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி"

என்ற திரையிசைப் பாடல் இன்றைய சிறுவர்களே நாளைய நாட்டின் தலைவர்கள் என்பதை விளக்குகின்றது. எனவே விண்ணரசுக்கும் மண்ணரசுக்கும் சிறுவர்கள் உரித்துடையவர்கள். சிறுவர்கள் எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளச் செய்யும் பருவத்தினர். கள்ளமில்லாத பிஞ்சு உள்ளத்தவர்கள், துள்ளித்திரியும் துடிப்பு உள்ளத்தவர்கள். நன்மை எது? தீமை எது? நமது எதிர்காலம் எப்படியானது? அதற்கு யாது செய்ய வேண்டும்? என்பதைப் பற்றிச் சிந்திக்க முடியாத சிறகடித்துப்பறக்கும் பறவை போன்றவர்கள். சிறுவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு பெற்றவர்களுக்கு மட்டுமல்ல, அனைத்துத் தரப்பினருக்கும் உரியதாகும்.

சிறுவர்கள் கொண்டுள்ள உரிமைகள் பல உள்ளன. ஆனால் அத்தகைய உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்காமல் மீறப்படும் சந்தர்ப்பங்களே அதிகம் உள்ளன. இன்றைய நவீன உலகில் சிறுவர்கள் அகப்புறச் சூழ்நிலைகளால் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர். குறிப்பாக இலங்கையில் யுத்தம் முடிவடைந்த நிலையில் சிறுவர்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து நிற்பதைக் காண முடிகிறது.

போரின் பின்னணியில் சிறுவர்கள் எதிர்நோக்கியுள்ள அவர்தம் உளவியல் ரீதியான தாக்கங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவிற்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது. இச்சிறுவர்கள் மோசமான மன இறுக்க ஒழுங்கீனம் (Acute Street Disorder) அதிர்ச்சிக்குப் பின்னரான மன இறுக்க ஒழுங்கீனம் (Post Traumatic Street) என்ற நிலையில் உளவியல் ரீதியான துன்பங்களை அனுபவித்திருக்கின்றனர்.

தனிமை, வெறுமை, பயம், பயங்கர உணர்வு, ஏகாந்தநிலை, கட்டுப்பாடற்ற நிலை, பயங்கர கனவு, தூக்கமின்மை, மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, அதீத உணர்வுக்கிளர்ச்சி, பாலியல் பிரச்சினைகள், அமைதியின்மை, விரக்தி, ஏக்கம், கவலை, பதகளிப்பு, மனச்சோர்வு, தாழ்வுச்சிக்கல், பிற்போக்குத்தனமான செயல்களில் ஈடுபடல்.



இ.இ. வசீகரன்
– ஆசிரியர் –

நிற்பினும் மேலும் பல சிறுவர்கள் திசை தெரியாமல் இன்னமும் எம் சமூகத்தில் பயணிப்பது வேதனைக்குரியது.

சிறுவர்கள் வேலைக்கமர்த்தல் என்னும் துன்பியல் நாடகமும் மற்றொரு பக்கம் அரங்கேறி வருகிறது. குடும்பங்களின் வறுமை நிலை, சிறுவர்களின் அநாதரவான நிலை, பிள்ளைகளை வருத்தி தாம் வாழவேண்டுமென்ற பெற்றோரின் உளவியல் பாங்கு சிறுவர் தலைகளில் சுமைகளை சுமத்தி நிற்க, சிறுவர்கள் சுமைதாங்கிகளாக நிற்கின்றனர். இவர்கள் தொடர்பாக பல சட்டங்கள் அமுல்படுத்தப்படினும் முழுமையாக இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

கற்றலில் ஆர்வமின்மை போன்ற பல்வேறு உணர்வுகளுக்கும் உளநிலைகளுக்கும் சிறுவர்கள் உள்ளாகியுள்ளனர்.

சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படும் நிலை புங்குடுதீவு மாணவி வித்தியாவுடன் முற்றுப் புள்ளியாகவில்லை. வேலிகளே பயிரை மேய்யும் தொடரும் அவலமாக அரங்கேறி வருகின்றது. "குழந்தைகளும் குழந்தை பெறுகின்றனர்" என்ற எம் சமூகத்தின் துர்ப்பாக்கிய நிலை இங்கு நோக்கத்தக்கது. சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது, திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது.

மாற்றுத்திறனாளிகளான பல சிறுவர்களை சிறுவர் இல்லங்கள் பல பொறுப்பேற்று அவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டி

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் வலைப்பின்னல்களுக்குள் சிக்கிச் சீரழியும் சிறுவர்கள், போதை என்னும் வாதைக்கு பாதை சமைத்து வரும் சிறுவர்கள் வாளுடன் வலம் வரும் சிறுவர்கள் என சிறுவர் உலகம் பல்வேறு பரிமாணங்களில் சூனியமாக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் கவிதை வரிகள் எமது சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் மற்றுமொரு வடிவத்தை எமக்குக் காட்டுகின்றது.

**உதிரத்தை ஊட்டி**
**உதரத்தில் சுமந்து**
**பெற்றெடுத்த மழலையை**
**தெருவில் போடுகின்றாள்**
**குப்பைக்குள் எறிகின்றாள்**
**மலக்குழிக்குள் தள்ளுகின்றாள்**
**பேருந்து நிலையங்களில்**
**கைவிட்டு ஓடுகின்றாள்**
**தண்டவாளத்தில் கிடத்திவிட்டு**
**தலைமறைவாகின்றாள்**
**தமிழன்னை தமிழின் அன்னை**
**மழலைகள் கொஞ்சி**
**குதலைகள் பேசி**
**மகிழ்ந்திட்ட எம் பண்பாட்டில்**
**இப்படியும் ஒரு அவக்கேடா?**

பத்துமாதம் சுமந்து பெற்ற பச்சிளம் குழந்தையை முகவரி தெரிந்தும் தெரியாத காரணத்தால் குப்பையென எண்ணி வீசிவிடும் விநோதம் உலக அதிசயங்களில் ஒன்றாகத்தான் அமையாதா?

சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெறுமனே எல்லோரும் எடுத்துக்காட்டி, பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி அனுதாபக் கண்ணீர் வடிப்பதோடு நின்றுவிடாது, ஆக்கபூர்வமான செயற்பாடுகளினால் சிறுவர் உலகிற்கு ஒளியூட்ட அனைவரும் முன்வர வேண்டும். தேசத்தின் சமாதானமும், செழுமையும் தனி மனிதர்களினதும் சமூகங்களினதும் கண்ணியமும், சுதந்திரமும் நிலைக்க வேண்டுமெனில் அதற்கு ஒரே வழி சிறுவர்களைப் பாதுகாப்பதேயாகும். தமிழினத்தின் விடிவிற்கும் சுபீட்சமான எதிர்காலத்திற்கும் அதுவே திறவுகோலாகும். சிந்தியதைப் பற்றிச் சிந்திக்காமல் சிதறியதை சேகரிக்கப் பாடுபடுவோம்.

**அன்புள்ள இயேசுவே!**
**சிலுவையில் உம்மை அறைந்தார்கள்**
**மூன்றாம் நாள் நீர் உயிர்த்தெழுந்தீர்**
**எம் சிறுவர்கள் மீது**
**சிலுவைகளை அறைகிறார்கள்**
**இவர்களின் உயிர்ப்பு எப்போது?**



# உயிர்ப்பு என்பது ஒரு நாளாந்த அனுபவமே

உயிர்ப்பு என்பது தினம்தோறும் நிகழும் அனுபவமாகும். இறப்பிற்குப் பின் நிகழும் உயிர்ப்பு என்பது உயிர்ப்பின் ஒரு பக்கமாகும். உயிர்ப்பு வாழ்வில் அனுபவமாக மாறுவது நாம் எம்மை இழப்பது, மறுப்பதில் தான் தங்கியுள்ளது. தொடர்ச்சியான மனமாற்றத்தின் அனுபவமாகவே உயிர்ப்பு நோக்கப்பட வேண்டும். இன்று எமது வாழ்க்கையில் மரணிக்கவேண்டிய எத்தனையோ மனநிலைகள் உண்டு. இதனைச் சிந்தித்துப் பார்க்க இயேசுவின் உயிர்ப்பு எமக்கு அறைகூவல் விடுக்கின்றது. இதற்குத் தொடர்ச்சியான மனமாற்றமும் அக யாத்திரையும் எமது சுயநல வட்டத்தைத் தாண்டி சமூகத்தின் விடிவுக்காக உழைக்கவேண்டியதும் உயிர்ப்பின் கூறுகளாகும்.

**மனமாற்றம் ஒரு தொடர் அனுபவம்**

மனமாற்றம் என்பது வாழ்நாள் முழுவதுக்குமான அழைப்பாகும். இதனை தவக்காலத்துக்கு உரிய அழைப்பு மட்டுமென்று வரையறை செய்துவிட முடியாது. மனமாற்றம் என்பது அடிப்படையில் மனநிலைகளில் ஏற்படும் மாற்றமாகும். இறைவனோடும் அயலவரோடும் நெருக்கமான உறவில் வாழ்வதற்கு தடைகளாக இருப்பவை பற்றிச் சிந்தித்து எம்மைப் புதுப்பித்து வாழ்வதே உண்மையான மனமாற்றமாகும்.

ஆனால், வெளியரங்க சில செயல்களோடு தொடர்புபட்டதாக மட்டுமே பெரும்பாலும் இவை அமைந்து விடுகின்றது. இதனால்தான் தவக்காலத்தில் உண்ணாநோன்பையும் பக்தி முயற்சிகளையும் மட்டும் நாம் முதன்மைப்படுத்தி கடைப்பிடிப்பதால் மனமாற்றம் கானல் நீராகவே மாறிவிடுகின்றது. வாடிக்கையாக வந்து போகும் காலமாக தவக்காலத்தை மாற்றிவிட்டோம்.

இன்று இறைவனுக்கும் அயலவருக்கும் நெருக்கமாக இருப்பதைவிட முகநூலிலும், வைபரிலும், வட்சப்பிலும் இருப்பதையே விரும்புகின்றோம். அதைப்பற்றிய சிந்தனைகளால் நம் இதயங்களை நிரப்பிவிட்டோம். இத்தகைய பின்புலத்தில் எப்படி மனமாற்றம் சாத்தியமாகும்?

**மனமாற்றம் ஒரு அக யாத்திரை**

தவக்காலத்தில் பக்தி முயற்சியாக நாம் திருத்தலங்களுக்கு பயணம் செய்கின்றோம். வெறுமனே ஒரு பயணமாக யாத்திரையாக, விடுமுறையாக இப்பயணம் அமையும்போது அது சாதாரண நிகழ்வாகி விடுகின்றது. எமது ஆன்மீக வாழ்வை தனிப்பட்ட வாழ்வை, சமூக வாழ்வை சீர்தூக்கிப் பார்க்க இத்தகைய யாத்திரைகள் உதவுகின்றபோது, எமது வாழ்வை வளப்படுத்த முடியும். இதைவிட மேலாக எமக்குள்ளே ஒரு அக யாத்திரை (Inner journey) மேற்கொள்வது மனமாற்றத்துக்கு இன்றியமையாதது. இதற்கு தியானமும், செபமும், சுய சோதனையும் இன்றியமையாதவை.

இன்றைய அவசரமான உலகிலே கைபேசிக்குள்ளும், கணனிக்குள்ளும் எம் வாழ்க்கையை தொலைத்துவிடாமல் இருப்பதற்கு

**அருட்பணி ஸ்ரனி அன்ரனி (அமதி)**

அகச் சோதனை அவசியமாகும். இறைவனுக்கு எதிரான தீமைகளை இனங்காணுதல், சமூகத்தில் இன்று நடப்பவை பற்றிய எமது பாராமுக மனநிலைகள், (In Difference) போன்றவற்றை ஆய்ந்தறிவது அக யாத்திரையின் உண்மை நோக்கங்களாகும்.

**மனமாற்றம் தெருவிற்கு வரும் அனுபவம்**

இன்று எமது வழிபாடுகள் பெரும்பாலும் வாழ்வைத் தொடாதவையாகவே மாறிவிட்டன. வழிபாடுகள் வாழ்வின் தாக்கத்தை மனமாற்றத்தை ஏற்படுத்துபவையாக அமையவேண்டும். இன்று நாம் கிறிஸ்தவத்தை ஆலயத்திற்குள் மட்டும் நடக்கின்ற நிகழ்வாக மாற்றிவிட்டோம். ஆலயங்களை அமைப்பது, அழகாக்குவது, திருவிழாக்கள் கொண்டாடுவது என ஆலயத்தை மையப்படுத்தியதாகவே எமது வாழ்க்கையை அமைத்துவிட்டோம். நாங்கள் தெருவுக்கு வந்து சமூகத்தில் நடக்கும் அவலங்கள், தீமைகள் மட்டில் அக்கறை கொள்ளவேண்டும்.

திருச்சபையை தெருச் சபையாக மாற்றும்போது கிறிஸ்துவுக்கு இறை அரசுக்கு சாட்சியம் பகர முடியும். இன்று போருக்குப் பின் வீதியில் போராடும் எமது மக்களின் அவலங்களில் சிலுவைகளில் இயேசுவைக் கண்டு தோள் கொடுக்கும் சீமோன்களாக மாறுவோம்.
திருச்சபை மக்கள் மயம் கொண்டதாக மாறுகின்றபோது தான் இயேசுவின் இறையரசைக் கட்டியெழுப்ப முடியும்.

**நிறைவாக**

உயிர்ப்பு என்பது அடிப்படையில் புதுவாழ்வை நோக்கிய பயணமாகும். இயேசு உயிர்த்து விட்டார். நாம் எப்போது உயிர்க்கப்போகிறோம் என்பதே இன்றைய கேள்வியாகும். எம்மை அடிமைப்படுத்தியிருக்கும் சாதிய வர்க்க வேறுபாடுகள், மதத்தை வாழ்வாக்க இயலாமை, அடுத்திருப்பவர் மட்டில் உள்ள பாராமுக,மனநிலைகள் என்பவற்றிலிருந்து எப்போது விடுதலை பெறுகின்றோமோ அத்தகைய வேலிகளை, சிறைகளை எப்போது உடைக்கின்றோமோ அன்றே எமக்கு உயிர்ப்பு. எனவே உயிர்ப்பை எமது வாழ்வின் தொடர்ச்சியான அனுபவமாக்கி வாழ முயற்சிப்போம்.

# கிறிஸ்து ஏன் உயிர்த்தெழவேண்டும்?

கிறிஸ்து ஏன் உயிர்த்தெழ வேண்டும்? என்ற வினாவிற்கு சமாந்தரமாக நாம் இன்னுமொரு வினாவையும் எழுப்பமுடியும். நாம் ஏன் கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொள்ள வேண்டும்? என்பது தான் அந்த சமாந்தரமான வினாவாகும்.



அருட்சகோ. க.யூட் ஜெமில்டன்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

எபிரேயருக்கு எழுதப்பட்டுள்ள மடலிலே குறிப்பிட்டுள்ளது போல "இயேசுக்கிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலை பலியாக செலுத்தியதன் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம்" (எபி.10:10) இயேசுவின் உன்னத பலியான சிலுவைச் சாவிலே எக்காலத்துக்குமுரிய உலக மக்கள் அனைவரும் மீட்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே நாம் ஏன் கிறிஸ்துவின் உயிர்ப்பிலேநம்பிக்கை கொள்ளவேண்டும்? தனது உடலைப் பலியாக்கியதன் மூலம் மானிட குலத்தை மீட்டுக்கொண்ட இயேசு ஏன் உயிர்த்தெழ வேண்டும்?

நாம் யூத மக்களின் வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும்போது பாபிலோனியாவிலிருந்து அவர்களை விடுதலை செய்து, மீட்டுச் செல்கின்ற அரசியல் ரீதியான மெசியாவையும் மோசேயின் சட்டங்களையும் யூத மதத்திற்கே உரிய தனித்துவமான சமய சம்பிரதாயங்களையும் மீளக்கொண்டு வந்து வழக்கில் உள்ள முறைகளை மறுசீரமைக்கின்ற ஒரு மத ரீதியான மெசியாவைத் தான் யூதர்கள் எதிர்பார்த்தார்கள். அதே எதிர்பார்ப்புத்தான் இயேசுவின் காலத்திலும் இருந்தது. அதாவது உரோமைய சாம்ராச்சியத்திலிருந்து யூதர்களை விடுவித்து, தன்னிலை இழந்துகொண்டிருக்கும் யூத சட்டங்களையும், சமய முறைகளையும் மறுசீரமைக்கின்ற மெசியாவையே இயேசுவின் காலத்திலும் அவர்கள் எதிர்பார்த்தார்கள். இதனால் அவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்ளத்தயங்கினார்கள். இயேசு உரோமையர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்தார். யூத சட்டங்கள் மனிதனுக்கானதே ஒழிய, மனிதன் யூத சட்டங்களுக்கானவன் இல்லை என்ற கருத்தை முன்வைத்தார். இது அவர்களின் மெசியா பற்றிய எதிர்பார்ப்புக்கு முற்றிலும் முரணாய் இருந்ததால், அவரை மெசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் சிலர் அவரை மெசியாவாக ஏற்றனர்.

ஆனால், இயேசுவின் கொடிய வேதனையான அவமானத்திற்குரிய சிலுவைச்சாவு அவரை மெசியாவாக ஏற்றுக்கொண்டவர்களின் நம்பிக்கையை ஆட்டம்காண வைத்தது. இந்நிலையில் இயேசுவின் உயிர்ப்பு மெசியா பற்றிய நம்பிக்கைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகின்றது.

அதனைவிட இயேசுவினுடைய கடவுள் தன்மை பற்றிய உண்மை அவரின் உயிர்த்தெழுதலில் உறுதிப்படுத்தப்பட்டது. தி.பா.16:10 இல் "என்னை பாதாளத்திடம் ஒப்புவிக்க மாட்டீர் உம் அன்பனை படுகுழியைக் காண விடமாட்டீர்" என்று கூறிய இறைவாக்கு இயேசுவின் உயிர்ப்பில் முழுமையடைகின்றது.

"நீங்கள் மானிட மகனை உயர்த்திய பின்பு இருக்கிறவர் நானே என்பதை அறிந்து கொள்வீர்கள்" என யோவான் நற்செய்தி 9:28 இல இயேசு கூறியது போல அவரது உயிர்ப்பு அவரே இறைமகன் என்பதை நிரூபித்தது. இதனையே புனித பவுல் தி.ப.13:32 இல் "இயேசுவை கடவுள் உயிர்த்தெழச் செய்ததன் வழியாக மூதாதையருக்கு அளித்த வாக்குறுதியை அவர்கள் பிள்ளைகளாகிய நமக்கென நிறைவேற்றினார்" என சான்று பகர்கின்றார்.

பாஸ்கா மறைபொருளானது இரு தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றது.

ஒன்று தமது இறப்பினால் கிறிஸ்து எம்மைப் பாவத் திலிருந்து விடுவிக்கின்றார். மற்றையது தமது உயிர்ப்பினால் எமக்கு புதிய வாழ்வுக்கான வழியைத் திறந்து விடுகின்றார்.

ஆகவே, நாம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாவதற்கு பாவத்திலிருந்து விடுதலை பெறுவது மட்டும் போதாது. மாறாக இறையருளால் புதிய வாழ்வு வாழவேண்டும். "இயேசு ஆண்டவர் என வாயார அறிக்கை இட்டு, இறந்த அவரை கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள்" (உரோ.10:9)

இயேசு ஆண்டவர் என நம்பினால் அவர் சொல்வதை செய்வோம். அவர் உயிர்த்தெழுந்தார் என நம்பினால் நாம் வாழும் கடவுளின் மக்களாவோம்.

# கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவ வாழ்வின் உச்சம்

கிறிஸ்து இயேசுவை பின்பற்றி வாழும் எமக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு உச்சமாக விளங்குகின்றது. கிறிஸ்து வாழ்ந்து காட்டிய பாதை முட்கள் நிறைந்தவை. இரத்தமும் சதையும் வழிந்தோடிய இடம். இப்பாதையில் பயணிக்கும் எமக்கும் நிச்சயம் உயிர்ப்பு உண்டு. கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பே கிறிஸ்தவ மதத்தின், கிறிஸ்தவ வாழ்வின் அடையாளம். கிறிஸ்து உயிர்பெற்றிராது இருப்பின் எம்முடைய விசுவாசம் மரணித்துப்போயிருக்கும். அதனால் தான் மரணத்தின் பின்பு மறு உலக வாழ்வு உண்டு எனவும், கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டதுபோல இறந்த ஒவ்வொருவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என திருமறை கூறுகிறது.

**" இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுதல் என்பதை உறுதிப்படுத்துகின்றது" (1 கொரி 15:20)**



என கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டது போல இறந்த ஒவ்வொருவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என புனித பவுல் எமக்கு நம்பிக்கை தருகின்றார்.

இறந்தோர் உயிர்த்தெழமாட்டார் என்பது எம்முடைய மனித அறிவு, ஆனால், அதே மனித அறிவிற்கு புனித பவுல் கூறுகின்றார் "இறந்தோர் உயிரித்தெழ மாட்டார் எனில், கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகி விடும்" (1கொரி 15:13) உயிர்த்த இயேசுவின் சாட்சிகள் என்று கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு சான்றுபகரும் நாம் ஒருநாள் மரணத்தின் பிடியிலிருந்து உயிர்பெறுவோம். இவ்வுண்மை கிறிஸ்தவர்களாகிய எமக்கு எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஆதாமின் வழியாக இந்த உலகிற்கு சாவு வந்ததுபோல இறுதி ஆதாமின் வழியாக நாம் உயிர் பெறுகின்றோம்.

**அருட்சகோ. றே.றொனால்ட்**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**

நாமும் ஒருநாள் உயிர்த்தெழுவோம் என்று கூறிவிட்டு எம் வாழ்வு ஊனியல்பின் இச்சைகளுக்கு உட்பட்டு, மனம் போன போக்கில் வாழப்பழின் இயேசுவை நாம் முகமுகமாய் கண்டுகொள்ள முடியாது. மாறாக நாம் தூய ஆவியாருக்குரிய இயல்புகளோடு வாழும்போது உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக மாறமுடியும்.

நாம் இன்று பல்வேறு மாய வலைகளுக்குள்ளும், சிற்றின்பங்களுக்குள்ளும் சிக்குண்டு விஷ ஜந்துகளாக எம்மை மாற்றிக் கொண்டிருக்கிறோம். "தூய ஆவியாரின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுங்கள் அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள்" (கலா.5:16) எனப் பவுல் கூறுவதுபோல பழைய வாழ்வைப் புதைத்து, புது வாழ்வில் புது மனிதராகி உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்திடின் இயேசுவில் நாமும் ஓர் நாள் உயிர்பெற்றெழுவோம்.

## 31ம் நாள் நினைவு

பிறப்பு 25 . 01 . 1951



இறப்பு 20 . 02 . 2018

## மோசேப் சூசைப்பிள்ளை

"நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்துக் கொண்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது
நேரிய வாழ்விற்கான வெற்றி வாகையே"
(2திமோ. 7:8)

Ad-30 குடும்பத்தினர்

## 1st Year Rememberance



Let our hearts
Sing Song of praise
May we see your smile
And hear your voice
Guiding andProtecting us
Everyday in our life
May you rest in peace.

ONE YEAR
LOVING MEMORY
OF
STELLAFEDINAND

28TH MARCH 2018
+ 28TH MARCH 2017

Ad-29

From
Your loving Husband, Children,
Grandchildren, Brother and Sisters


## இளையோர் ஆண்டை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினால் நடாத்தப்படும் போட்டிகள்

### நாடகப்போட்டி

இளையோர் ஆண்டை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கஇளையோர்ஒன்றியத்தினரால் "இறைதிட்டம்தேடும் இளையோர் பயணம்" எனும் கருப்பொருளில் நாடகப் போட்டி மற்றும் குறும்படப் போட்டிகள் என்பன நடாத்தப்படவுள்ளன.

நாடகபோட்டி தெரிவின்போது எழுத்துரு, மையப் பொருள், நெறியாள்கை, ஒப்பனை, காட்சியமைப்பு, ஆற்றுகை செய்யப்படும் விதம் போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

ஆக்கம் சுய ஆக்கமாக அமைவதோடு புத்தாக்கப் படைப்பாகவும், ஆற்றுகையாளர் பங்கு இளையோராக இருப் பதை பங்குத்தந்தை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். பங்கிலிருந்து ஒரு குழு மாத்திரமே பங்குபற்ற முடியும். எழுத்து ஆற்றுகையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இன, மதம், கலாசார முரண்பாடுகளைத் தோற்றுவிக்காதவாறு படைப்பு இருத்தல் வேண்டும்.

மறைக்கோட்ட ரீதியாக போட்டிகள் நடத்தப்பட்டு ஒரு நாடகம் தெரிவு செய்யப்பட்டு, மறை மாவட்ட ரீதியாக பின்னர் நடத்தப்படும். சிறந்த நடிகர் நடிகைகளுக்கான பரிசில்களும், 1ம் 2ம், 3ம் பரிசுகளுக்கு முறையே ரூபா 20,000, 15,000, 10,000, பணப் பரிசும் வழங்கப்படும். போட்டிக்கான கட்டணம் ரூபா 500.

### குறும்படப் போட்டி

திரைப்படக்கதை, ஒளித்தொகுப்பு, பாத்திரத் தெரிவு, பின்னணி இசை என்பன கருத்திற் கொள்ளப்படும்.

சுய ஆக்கமாக 15 நிமிடத்திற்கு உட்பட்டதாகவும், படைப்பின் முக்கிய பாத்திரங்களும், இயக்குனரும் இளையோர் ஒன்றிய அங்கத்தவராகவும் இருத்தல் வேண்டும். பாத்திரங்கள் பங்கு இளையோராக இருத்தல் வேண்டும்.

படைப்புகள் இனம், மொழி, கலாசார முரண்பாடுகளைத் தோற்றுவிக்காமலும் ஒளி, ஒலி அமைப்புக்கள் தெளிவுள்ளதா கவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பிரதிநிதிகள் குறும்படம் தொடர்பாக இடம்பெறும் பயிற்சிப் பட்டறையில் பற்குபற்றுதல் வேண்டும்.

சிறந்த நடிகர், நடிகை, இயக்குனர் தெரிவு செய்யப்படு வதுடன், முதல் மூன்று இடங்களுக்கும் ரூபா 25,000, 20,000, 15,000 பணப் பரிசுகள் வழங்கப்படும். போட்டிக் கட்டணம் ரூபா 500.

விண்ணப்பங்களை 15.04.2018 ஆம் திகதிக்கு முன்னர் இயக்குனர், இளையோர் ஆணைக்குழு, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக தொடர்புகளுக்கு : அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் (0770252184), நெ.அனோஜ் (0776589602)

## துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவாகிய அமரர் அருட்பணி சறத் ஜீவன் அடிகளாரின் அன்புத் தாயார் கசில்டா மங்களநாயகி மரியாம்பிள்ளை அவர்கள் 11.03.2018 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் ஆன்மா இறை சந்நிதானத்தில் இளைப்பாற பிரார்த்தித்து குடும்பத் தினருடன் பாதுகாவலன் துயர்பகிர்ந்து நிற்கின்றது.


## மணி விழா வாழ்த்துக்கள்



ஆயிரம் கிளை பரப்பி ஆலமரமாய்
அறுபது ஆண்டுகால திருமண வாழ்வு
ஆண்டவரின் அருள் நதியில்
ஆழமாய் வேரோடிய ஆன்மீக வாழ்வு
ஆயரையே உருவாக்கிய அழகான உறவுகள்
ஆசி மழைத் தூறல்களில்
அனுதினமும் நனைந்திட வாழ்த்துகிறோம்
ஆண்டவனை அன்பாய் வேண்டுகிறோம்

176 லேக் றைவ்
கொழும்பு -08

வாழ்த்துக்களோடு
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,

## கத்தோலிக்க அச்சகத்தில் மலிவு விற்பனை

வேதாகமம் மற்றும் மோட்சபாதை, செப புத்தகங்கள், பூசைப் பாத்திரங்கள், திருச்சொரூபங்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

## 1ம் ஆண்டு நினைவு தினம்

மண்ணில் 21 - 05 - 1920



விண்ணில் 09 - 04 - 2017

AD28

அமரர்.திருமதி
### அன்னம்மா இராசநாயகம்

" உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் "
(யோ.11:25)

அன்புடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் 4ம் வருட நினைவஞ்சலி

மண்ணுலகில் 06 - 02 - 1928



விண்ணுலகில் 28 - 03 - 2014

அமரர்
### அந்தோனிப்பர்னாந்து செலீனம்மா

" ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும் " தி.பா 27:4

அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு அம்மாவே
நீர் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

Ad24

5ம் வட்டாரம்
மண்டைதீவு

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 - 03 - 1937



இறப்பு 01 - 04 - 2010

திருமதி
### மேரி ஜோசவின் பாக்கியநாதர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

" என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வார் "
(யோவான் 11.25)

Ad26

அன்புடன் நினைவு கூரும்
கணவர்– அ.பாக்கியநாதர்
பிள்ளைகள் – றெஜி,றொகான்,றதீஸ்குமார்
மருமக்கள் – நிஜிதா,வதனி,தயாளினி
பேரப்பிள்ளைகள் – மேரி றியாங்கி, ஜெறோம், ஆன்செரன்,
ஆன் வரோணி மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

"மரியன்ஸ்" கல்லூரி வீதி,
மாவிட்டபுரம்.

## ௨ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கனகராஜா மரியகொறற்றி (நேசராணி)

பிறப்பு 11 - 05 - 1955
இறப்பு 27 - 03 - 2016

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

AD27

நாவலர் வீதி
நாவாந்துறை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# புனித வாரத்தில் தடம் பதிக்கும் நாம்...

## புனித வியாழன்



புனித வியாழன் மூன்று பிரதான விழாக் களை அடையாளப்படுத்தும் தினமாகும். ஆண்டவர் தம் மக்கள் மீது கொண்டிருக்கும் அன்பை வெளிப் படுத்தும் பாஸ்கா விழா. இயேசு தன் உடலையும் இரத்தத்தையும் நமக்காக பலியாக்கி அதனை நிரந்தரமாக நினைவிற்கொள்ள ஏற்படுத்திய நற் கருணை விழா. நற்கருணையை நிலைநிற்கச் செய்ய இறைபணியாளர்களை ஏற்படுத்திய குருத்துவ விழா. இத்தகைய முப்பெரும் விழாக்களுக்கு களம் அமைத்துக் கொடுத்த புனித வியாழன் தினத்தையும், வழிபாடுகளையும் அர்த்தமுள்ளதாக நாம் அனுஷ்டிக்க வேண்டும்.

புனித வியாழன் வழிபாட்டில் பாதங்கழு வும் சடங்கு, நற்கருணை விருந்து, காணிக்கை செலுத்துதல், நற்கருணை இடமாற்றப் பவனி என்பவை முக்கியத்துவம் பெறுகின்றது.

### பாதம் கழுவுதல்

யூத சமுதாயப் பின்னணியில் அடிமை தனது எஜமானின் பாதங்களைக் கழுவும் நிகழ்வு நடைபெற்று வந்தது. இயேசு இதனை தலை கீழாக மாற்றி அமைத்ததுடன், சீடர்களையும் அவ்வாறே செய்யும்படி பணிக்கின்றார். "போதகரும் ஆண்டவருமாகிய நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் ஒருவரு- டைய பாதங்களைக் கழுவுங்கள்" என ஆண்டவர் இயேசு உரைத்தார்.

இப்பாதங்கழுவும் சடங்கு நமக்கு இரு பேருண்மைகளை உணர்த்துகின்றது. ஒன்று நமக்கிடையே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அனைவரிலும் ஆண்டவனின் சாயலைக் கண்டு, அன்பினால் அனைவரையும் இணைத்துக்கொள்ள வேண்டும். மற்றையது தலைவர்களாக இருக்க விரும்புபவர்கள் பணியாளர்களாக மாறிநின்று அதிகாரம் தலைதூக் காது தாழ்மையுடன் பிறரன்புப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்பதாகும்

### நற்கருணை விருந்து

புனித வியாழன் நற்கருணை பிறந்த நாள். "எல்லோரும் உயிர்பெறும்படி வந்தேன்" என்று கூறிய இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் எமக்காகப் பலியாக்கியதை எந்நாளும் நாம் நினைவுகூருவதற்காக "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" எனக் கூறி திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார். இவ்விருந்தில் பங்கெடுக்கும் நாம் பிறருக்காக நம்மைத் தியாகம் செய்து, நம்மைப் பிட்டு நாமும் நற்கருணையாக மாறவேண்டும் என்பதையே இது நமக்கு உணர்த்தி நிற்கின்றது. தியாகம் இன்றேல் வாழ்வு இல்லை. தியாகம் இன்றேல் மீட்பு இல்லை. பிறருக்காக நாம் சிந்தும் செந்நீரும் கண்ணீரும் தான் நற்கருணை ஊடாக கிறிஸ்து இயேசுவிடம் நம்மை இணைக்கும் பாலமாகும்.

### காணிக்கை

புனித வியாழன் வழிபாட்டில் சேகரிக்கப் படும் காணிக்கை ஏழை எளியவர்களுக்கு வழங்கப் படுகிறது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். உண்ணா நோன்பிருந்து, மாமிசம் தவிர்த்து, பல தவ முயற்சிகளில் ஈடுபட்ட நாம் அதில் மீதப்படுத்திய பணத்தை ஈஸ்ரர் அன்று ஆடம்பரச் செலவுகளிலும், மது போதைகளிலும், கொழுத்த உணவுகளிலும் செலவழிக்காது ஏழையர்களுக்கு கொடுப்பதில் தான் நமது தவ முயற்சிகளுக்கான பலன் கிடைக்கின்றது. "சின்னஞ்சிறிய என் சகோதரர் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் வாக்கு நம் கண்முன்னே நிற்க ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.

### நற்கருணை இடமாற்றப் பவனி

நற்கருணைஇடமாற்றப் பவனி இயேசு இரவு உணவு மேசையிலிருந்து ஜெத்சமனித் தோட்டத்திற்கு செபிக்கச் சென்றதை அடையாளப் படுத்தினாலும் "விழித்திருந்து செபியுங்கள்" என கிறிஸ்து இயேசு கட்டளையிட்டதற்கு அமை- வாக நாம் விழித்திருந்து செபிக்கவேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்தி நிற்கின்றது.

ஏழைகள், அநாதைகள், காணாமல் ஆக்கப்பட்டோர், போரின் வடுக்களைச் சுமந்து நிற்போர், மாற்றுத் திறனாளிகள், நோயாளிகள், அரசியல் கைதிகள் போன்றோருக்காகவும் இறந்து போன ஆன்மாக்களுக்காகவும், யாரை விழுங்கலாமென சுற்றித்திரியும் சாத்தானின் வலைக்குள் சிக்குப்படாது நம்மையே நாம் காத்துக்கொள்வதற்காகவும் விழித்திருந்து செபிக்கவேண்டும்.

## புனித வெள்ளி



மனிதன் பாவத்திலிருந்து விடுதலை பெற்று தூய்மையான வாழ்வு வாழவேண்டுமென்பதற்காக இயேசு சிலுவைச் சாவை தேர்ந்தெடுத்தார். அவமானத்தின் சின்னமென்று கருதப்பட்ட சிலு- வையை இறை வல்லமையை வெளிப்படுத்தும் கருவியாக இயேசு மாற்றினார்.

சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தினால் மனித குலத்தினை இயேசு அழிவிலிருந்து காப்பாற்றினார். வீழ்ச்சி இல்லாமல் மாட்சி இல்லை. சிலுவையில்லாமல் மகிமையில்லை. முள்முடியில்லாமல் மணிமுடியில்லை. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை. சாவு இல்லாமல் வாழ்வு இல்லை.

புனித வெள்ளி வழிபாடுகள் இறை வார்த்தை வழிபாடு பொதுமன்றாட்டு, திருச் சிலுவை ஆராதனை, நற்கருணை திருவிருந்து என மூன்று பகுதிகளாக இடம்பெறுகின்றது. இவை ஒவ்வொன்றிலும் சிலுவையில் எமக்காக உயிர்நீத்த இயேசுவை நிதர்சனமாக தரிசித்து அவர் மீது எமக்குள்ள விசுவாசத்தை உண்மையாகவே ஆழப்படுத்துவோம்.

### இறை வார்த்தை வழிபாடும் பொது மன்றாட்டும்

பாடுகள் இன்றி உயிர்ப்பில்லை என்பதனை துன்புறும் ஊழியராம் கிறிஸ்து எவ்வாறு நடத்தப் பட்டார் என்பதனை இறைவார்த்தைகளின் ஊடாக நாம் தியானித்து சோதனைக்குப் பின்தான் சாதனை என்பதனையும் சாவுக்குப் பின்தான் வாழ்வு என் பதையும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இயேசு குறிப்பிட்ட ஓர் இனத்துக்காக அல்லது மக்களுக்காக சிலுவையில் மரிக்கவில்லை. மாறாக உலக மக்கள் அனைவருக்காகவும் சிலுவைச்சாவை ஏற்றுக்கொண்டார் எனவே அவர் எல்லோருக்கும் சொந்தமானவர். அனைவருக்கும் மீட்பர். இந்நிலையில் பொதுமன்றாட்டின் ஊடாக நாம் அனைவருக்காகவும் செபிக்கவேண்டியவர்க ளாக இருக்கின்றோம்.

### திருச்சிலுவை ஆராதனை

குருவானவர் பாடுபட்ட இறந்த கிறிஸ்து தொங்கும் சிலுவையை மூடியிருக்கும் துகிலை மூன்று முறை அகற்றி "திருச்சிலுவை மரம் இதோ இதிலே தான் தொங்கினார், உலகத்தின் மீட்பர்" என பாட அதற்குப் பதிலாக "வருவீர் ஆராதிப்போம்" என நாம் பதிலுரை பாடி "ஆணிகள் கொண்ட உம் திருக்காயங்களை அன்புடன் முத்தி செய்கின்றோம்" என இயேசுவை முத்தி செய்து எம் காணிக் கைகளையும் செலுத்துகிறோம். இத் திருச்சிலுவை ஆராதனை மிகுந்த பக்தியுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். "தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்" என கூறிய இயேசுவிடம் எம்மை ஒப்படைக்கும் அருள் நிறை நிகழ்வே திருச்சிலுவை ஆராதனையாகும்.

### நற்கருணை திருவிருந்து

இயேவை நம் உள்ளத்தில் ஏற்று நிற்கும் உன்னதமான நிகழ்வே நற்கருணை திருவிருந் தாகும். உள்ளங்களில் நிறைத்து வைத்திருக்கும் உலக மாயைகளையும், இல்லங்களில் நிறைத்து வைத்திருக்கும் இலௌகீக இன்பங்களையும் இடித்துத் தள்ளிவிட்டு இறைமகன் இயேசுவை எம் உள்ளத்திலும் இல்லத்திலும் ஏற்போம். "என்னைத் தேடு சகலமும் உன்னைத் தேடும்" என்கிறார் ஆண்டவர்.

## உயிர்ப்பு விழா



தொகுப்பு: ஜ.ஜ.வசீகரன்
ஆசிரியர்

கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு வரலாற்று நிகழ்வு. மறைக்க முடியாத மறுக்க முடியாத ஒரு சரித்திர உண்மை. சாவுக்கு சாவுமணி அடித்த பேரதிசயம். இயேசுவைப் போல் நாமும் உயிர்ப்பின் மக்களாக வாழ உயிர்த்த இயேசு மூன்று கொடைகளை எமக்கு வழங்கியுள்ளார்.

★ **பற்றற்ற தன்மை**

"என்னைப் பற்றிக் கொள்ளாதே" உயிர்த்த கிறிஸ்து மகதலேனா மரியாளைப் பார்த்துக் கூறினார் உலக ஆசைகளை, உடல் இச்சை களைப் பற்றிக் கொள்ளாத பற்றற்ற வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றோம்.

★ **அஞ்சாமை**

"அஞ்சாதீர்கள்" கிறிஸ்தவர்களாகிய நாம் எதற்கும் அஞ்சாது உண்மையை, நீதியை, நற் செய்தியை நிலைநாட்ட முன்வர வேண்டும்.

★ **விசுவாசம்**

"கண்டதால் விசுவசித்தாய், காணாமல் விசு வசிப்போர் பேறுபெற்றோர்." இறை நம்பிக்கையே வாழ்வின் நங்கூரம். உயர்வின் வழி. கை விரலை இட்டுப் பார்க்கப் போகின்றோமா? அல்லது விசுவசித்து வெற்றி கொள்ளப்போகிறோமா?

வாழ்வோம் கிறிஸ்துவில் புதுவாழ்வு

# புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில்நுட்பக் கூடத்தினைத் திறந்து வைத்தார் ஜனாதிபதி





யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் கட்டடத் தொகுதி கடந்த 19.03.2018 அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரி அதிபர் அருட்பணி ஏ.பி.திருமகன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் ஆயரும் கல்லூரியின் முகாமையாளருமான பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ இரா.சம்பந்தன், வடமாகாண முதலமைச்சர் கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## குருநகர் பங்கில் ' கல்வாரியே ...'
## கடலில் காட்சிப்படுத்தப்பட்ட சிலுவைத் தியானம்




'கல்வாரியே...' என்ற தலைப்பில் கடலிலே படகுகளில் காட்சிகள் நிகழ்த்தப்பட்ட சிலுவைத்தியானம் ஒன்று கடந்த 16ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு குருநகர் பங்கில் நிகழ்த்தப்பட்டது. தீர்ப்பு, பயணம், வீழ்ச்சி, சந்திப்பு, கையளிப்பு என்ற ஐந்து மையப்பொருட்களில் அமைந்த இச்சிலுவைத் தியானத்தை குருநகர் புனித யோசவ்வாஸ் இளைஞர் மன்றத்தினர் ஒழுங்கமைத்தனர். ஆசிரியர் திரு.இக்னேசியஸ் பிரபா காட்சிகளை நெறியாள்கை செய்திருந்தார். பாடல் மற்றும் கவிதை வரிகளை அதிபர் திரு. கெனத் மேரியன் அவர்கள் எழுதியிருந்தார். அருட்தந்தையர்கள் தே.ரவிராஜ், யேம்ஸ்நாதன் ஆகியோர் சிந்தனைகளை வழங்கினர். திரு. அன்றூ அவர்கள் ஒப்பனையையும், 'சுயம்பு' கலை பண்பாட்டு செயற்திறன் அரங்கின் சார்பில் திரு.கிறுதர்சர் நீக்கிலஸ் அவர்கள் ஒளியமைப்பினையும், திரு.ராஜ் ஒலியமைப்பினையும் மேற்கொண்டனர். இவ்வாறு பலரின் அனுசரணையோடும் ஒத்துழைப்போடும் நடைபெற்ற இந்நிகழ்வு பலரின் பாராட்டையும் பெற்றது. இதைப்போன்ற நிகழ்வு ஒன்று 40 ஆண்டுகளுக்கு முன் அருட்பணி பயஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றிருந்தமையை பலரும் நினைவு கூர்ந்தார்கள்.

## 'வெள்ளியில் ஞாயிறு'
## திருமறைக்கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி



தவக்காலத்தில் திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் திருப்பாடுகளின் காட்சியாகிய அரங்க ஆற்றுகையானது இவ்வாண்டு "வெள்ளியில் ஞாயிறு" என்னும் கருப்பொருளில் காட்சிப்படுத்தப்பட்டது. நான்கு தினங்கள் நடைபெற்ற பக்தி பூர்வமான இவ்வரங்க ஆற்றுகையை பலர் பக்திப்பற்றோடு கண்டு கொண்டனர். தமிழ் மறைமாவட்ட ஆயர்களின் ஆசீரோடு தினமும் இத்திருக் காட்சியானது இடம்பெற்றது. திருமறைக்கலாமன்ற இயக்குனர் நீ.மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தினை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். இயேசுவின் பாஸ்கா மறைநிகழ்வுகளை மையமாகக்கொண்டு இந்நாடகங்கள் எழுதப்பட்டாலும் அவற்றிற்குள் காலத் திறகு ஏற்ப பல்வேறு கோணங்களையும் பாடுபொருள்களையும் உட்புகுத்தி இவ் ஆற்றுகைகள் மேடையேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு மேடையேற்றப்படும் "வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் நாடகத்திற்கான எழுத்துருவை பிரதி இயக்குனர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதி இயக்கியுள்ளார்.

## இளவாலை மறைக்கோட்ட மறையாசிரியர்களுக்கான ' கலைவழி மறைக்கல்வி ' பயிற்சி



இளவாலை மறைக்கோட்டத்தில் பணியாற்றும் மறையாசிரியர்களுக்கான பயிற்சியின் அங்கமாக "கலைவழி மறைக்கல்வி " எனும் கருப்பொருளில் கடந்த 3ம், 4ம் திகதிகளில் வதிவிடப்பயிற்சி வழங்கப்பட்டது. தமிழ்நாடு திண்டிவனம் மறைப்பணி நிலையத்தின் மறைக்கல்வி செயற்பாடுகளின் செயலாளர் அருட்தந்தை ஜோர்ஜ் சின்னப்பன் அடிகளாரின் வழிநடத்தலில் இப்பயிற்சி இடம்பெற்றது. இளவாலை மறைக்கோட்டத்திலுள்ள 12 பங்குகளில் இருந்து 145 மறையாசிரியர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர்.

### புனித மரியன்னை பேராலயம்

பரிசுத்த வார வழிபாட்டு ஒழுங்கு 2018 (ஆயர் தலைமையில்)

| நாட்கள் | வழிபாடுகள் | நேரம் |
|---|---|---|
| குருத்து ஞாயிறு | திருப்பலிகள் | காலை 5.30 மணி<br>காலை 7.00மணி<br>மாலை 5.00 மணி |
| பரிசுத்தவார திங்கள் | திரு எண்ணெய் மந்திரித்தல் | மாலை 4.30 மணி |
| பரிசுத்தவார வியாழன் | திருப்பலி<br>பொது ஆராதனை | மாலை 5.00 மணி<br>இரவு 9.30 மணி |
| பரிசுத்தவார வெள்ளி | சிலுவைப்பாதை வழிபாடு | காலை 6.00 மணி<br>மாலை 5.00 மணி |
| பரிசுத்தவார சனி | திருவிழிப்பு வழிபாடு | இரவு 10.30 மணி |
| உயிர்த்த ஞாயிறு | திருப்பலிகள் | காலை 5.30 மணி<br>காலை 7.00 மணி |

### வாசக நெஞ்சங்களுக்கு

உயிர்த்த இயேசுவின் அல்லேலூயா
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். -ஆசிரியர்-




அல்லைப்பிட்டியில் மொன்போட் சபை சகோதரர்களின் நெய்தல் அகத்திற்கான அடிக்கல்லை யாழ் ஆயர் பேரருட்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நாட்டிவைத்தார்



கிளி.மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளருக்கான முதலாவது பயிற்சி அண்மையில் கிளிநொச்சி மேய்ப்புப்பணி நிலையத்தில் நடைபெற்றது.

டிஜிற்றல் மயமாகும்
புனித வளன்
கத்தோலிக்க அச்சகம்

புதுப்பொலிவு பெறும்
பாதுகாவலன் மண்டபம்
உங்கள் சகல விதமான குடும்பக் கொண்டாட்டங்களையும்
கொண்டாடி மகிழ
இல.360,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 2378 / 021 222 9041

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.